பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 23 புதன்கிழமை (06.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 139

வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பரிந்துரைகளில்

## கிராமிய பிரதேசங்களில் பாடசாலைகளை திறப்பது குறித்து நடவடிக்கை



### ஜனாதிபதி கோட்டாபய ஆராய்வு

(கொழும்பு)
வலயக் கல்விப் பணிப்பாளர்களின் பரிந்துரைகளின் பேரில் கிராமிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை திறந்து நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி 15

## கொரோனா தொற்றால் மேலும் ஒரு பெண் மரணம்

### 24 மணி நேரத்துக்குள் 9ஆவது நபரும் உயிரிழப்பு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் 9ஆவது உயிரிழப்பு நேற்று பதிவாகியுள்ளது.
உயிரிழந்தவர் மோதரையில் வசிக்கும் 52 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார 15

வட்டுக்கோட்டையில்

## முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

(சித்தன்கேணி)
வட்டுக்கோட்டை வடக்கு சித்தன் கேணியில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இதில் அதே பகுதியைச் சேர்ந்த இ.பாலசுப்பிரமணியம் (வயது-70) 15

அறிகுறிகள் காட்டாத நோயாளிகளிடமிருந்து

# கொரோனா சமூகத்தில் பரவும் அபாயம் உண்டு

### சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி எச்சரிக்கை

(கொழும்பு) கொரோனா வைரஸ் அறிகுறிகள் காட்டாத நோயாளிகளிடமிருந்து சமூகத்துக்குள் வைரஸ் பரவும் அபாயம் இருப்பதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



**இன்று இரவு 8 மணியிலிருந்து திங்கள் அதிகாலை 5 மணிவரை நாடு முழுவதும் ஊரடங்கு**

## கொரோனா 771 ஆக உயர்வு


(கொழும்பு)
கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 20 பேர் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 15

## சலூன்களை திறக்க கட்டுப்பாடுகளுடன் அனுமதி



13

## பாம்பு தீண்டியதில் வயோதிபர் மரணம்



மணற்காட்டில் சம்பவம்

13

## வயோதிபர்களை தாக்கிவிட்டு பணம், நகை அபகரிப்பு



உடுவிலில் அதிகாலை துணிகரம்

03

## கொரோனா தொற்றுக்கு மத்தியில் எவ்வாறு தேர்தலை நடத்துவீர்?

### சு.க. பொதுச் செயலாளர் தயாசிறி கேள்வி

(கொழும்பு)
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவும் இப்படியான சந்தர்ப்பத்தில் தேர்தல் ஒன்றை நடத்தி எப்படி மக்களுக்கு தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ள முடியும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பியுள்ளார். 15

## ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாத தொற்றாளர்கள்

### கொழும்பில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)
ஒன்றுடன் ஒன்று 15

கொழும்பில் பேக்கரி உணவுகளை வீடுகளுக்கு

## விநியோகம் செய்த நபரின் மனைவியே கொரோனாவால் மரணம்

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்த பெண்ணின் கணவர் முச்சக்கரவண்டியில் பேக்கரி உணவுகள் விற்பனை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
அத்துடன் இது வரையில் கொரோனா 15

பொதுத் தேர்தல், பொருளாதார நெருக்கடி தொடர்பில்

## அமெரிக்க தூதுவருடன் பிரதமர் மகிந்த ஆலோசனை



(கொழும்பு)
எதிர்வரும் காலத்தில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல், கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாடு, 15

சினிமா பாணியில்

## போதனாவிலிருந்து சிறைக் கைதி தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சிறைச் 15

விதிமுறைகளை மீறி காட்சிப்படுத்தப்பட்ட

## வேட்பாளர்களின் தேர்தல் பதாகைகளை அகற்றுக

### அரச அதிபர் க.மகேசன்

(யாழ்ப்பாணம்)
தேர்தல் விதிமுறைகளை மீறி காட்சிப்படுத்தப்பட்டுள்ள வேட்பாளர்களின் தேர் 15

# 11 ஆயிரத்துக்கு மேற்பட்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்

## நாடு திரும்பாமல் இலங்கையில் தங்கியுள்ளனர்

(கொழும்பு)

11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா வைரஸ் தொற்று தாக்கத்திற்கு மத்தியில் நாடு திரும்பாது இலங்கையில் தங்கியிருக்கும் அனைத்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் வரையில் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள தகவல்களின் அடிப்படையில் இலங்கையில் 11 ஆயிரத்து 389 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் தங்கியுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 12ஆம் திகதி கோவிட்-19 வைரஸ் தொற்று உலக தொற்று நோய் பரவுகையாக அறிவிக்கப்பட்ட போது சுமார் 76ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் தங்கியிருந்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில் இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தொடர்பில், இணைய தளத்தின் ஊடாக தகவல்கள் திரட்டப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு உதவும் நோக்கில் இவ்வாறு தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

### சுகாதார தரப்பின் பரிந்துரைக்கு அமைய

# விமான நிலைய பணிகளை ஆரம்பிப்பது குறித்து கவனம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

விமான நிலையத்தின் பணிகளை ஆரம்பிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார தரப்பின் பரிந்துரைகளுக்கு அமைய பாதுகாப்பான வழிமுறைகளில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையம்மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் ஆகியனவற்றின் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விமான சேவைகளை துரித கதியில் ஆரம்பிப்பது குறித்து நேற்றையதினம் விமான சேவைகள் அமைச்சில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

கொரோன வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்பட்டதன் பின்னர் சுகாதாரப் பிரிவின் ஆலோசனை வழிகாட்டுதல்கள் மற்றும் சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைவாக விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விசேட சலுகைகள், நிவாரணங்கள் வழங்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

### தற்போதைய நெருக்கடியை குறைக்க

# எவ்வித அரசியல் பாகுபாடுமின்றி நிவாரணங்களை பெற்றுக்கொடுங்கள்

## சபாநாயகர் கரு ஜயசூரிய

(கொழும்பு)

தற்போதைய நெருக்கடியைக் குறைப்பதற்கு மிகவும் வறிய மக்களுக்கு எவ்வித அரசியல் பாகுபாடுமின்றி நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும், கைத்தொழில் உற்பத்தி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கான செயற்திட்டங்களை முன்னெடுப்பதும் அவசியமாகும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.


கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், இது குறித்து கருத்து வெளியிடும் போதே கரு ஜெயசூரிய இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும் பகுதிகளில் மக்கள் மிகவும் பொறுப்புடன் செயற்படுகின்றார்கள்.

அதேவேளை தற்போதைய நெருக்கடியைக் குறைப்பதற்கு மிகவும் வறிய மக்களுக்கு எவ்வித அரசியல் பாகுபாடுமின்றி நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும், விவசாய உற்பத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதும், கைத்தொழில் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதும் அவசியமாகும் என்றார். (ம-3)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சிவபாதம்



தோற்றம் - 24.08.1936 மறைவு - 05.05.2020

*கணபதிப்பிள்ளை சிவபாதம் அவர்கள் நேற்று (05.05.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.*

*அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2020) புதன்கிழமை அவரின் பருத்தித்துறை ஐயனார் கலட்டி, இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர் மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

ஐயனார் கலட்டி,
பருத்தித்துறை.

(C-9565)

தகவல் : குடும்பத்தினர்
077 537 0284


ஆண்டு 2020 இல் அனைவருக்கும்

# வேலை வாய்ப்பு



எமது ஸ்தாபனத்தின் மூலமாக ORGANIC HOME GARDEN PROGRAMME (இரசாயன கலப்பற்ற வீட்டுத்தோட்டம்) வட மாகாணம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வீட்டுத்தோட்டம் வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் செய்து பயன் அடைய முடியும். இதற்கு மேல் பங்குபற்றுபவாகள் 8 வயதிலிருந்து அதற்கு மேல் எவ் வயதினரும் பங்குபற்றலாம்.

இதில் பங்குபற்றி வீட்டுத் தோட்டத்தை செய்பவர்கள் மாதாந்தம் ரூபாய் 20,000 தொடக்கம் வருமானத்தை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பாக வயது குறைந்த மாணவ மாணவியர் (Students) பங்குபற்றுவதன் மூலம் அவர்களது எதிர்கால கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவதாக அமையும்.

ORGANIC தோட்டம் உங்கள் வீட்டு முற்றத்திலேயே செய்வதாகும். இதற்கு எந்தவிதமான விவசாய சம்பந்தமான அறிவோ அனுபவமோ தேவை இல்லை. இது உங்கள் வீட்டு முற்றத்தில் BAGக்குகளின் மூலமாக செய்யலாம். இந் நிகழ்ச்சித்திட்டம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் வெற்றிகரமாக இலாபம் மீட்டும் தொழிலாக நடைபெற்று வருகின்றது.

இவ் விவசாய நடவடிக்கை மூலம் உங்கள் வீட்டுக்கு தேவையான மரக்கறி வகைகளை நீங்களே இரசாயன கலப்பில்லாத உரத்தினைக் கொண்டு செய்வதன் மூலம் உங்கள் குடும்பத்தாரை நோய் அற்றவராக உருவாக்கலாம்.

இவ்விடயம் சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் எம்மை அழைத்தால் உங்கள் கிராமங்களுக்கு வருகை தந்து இது பற்றிய விளக்கங்களை தரமுடியும்.

மேலதிக தொடர்புகள் :
**வறுமை ஒழிப்பு சமூகநல அமைப்பு**
**தொலை பேசி :- 076 167 6824, 076 769 9191**

எமது ஸ்தாபனத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் விற்பனை பிரதிநிதிகளுக்கான வெற்றிடங்கள் உண்டு.

(2697)


# மாற்று திறனாளிகளுக்கான விசேட அறிவிப்பு

**மாங்குளத்தில் அமைந்துள்ள லெபாரா நலனோம்பு மையத்தின் மூலம் பயன்பெறும் அவயங்களை இழந்த மாற்று திறனாளிகளுக்கு மெத்தா புனர் வாழ்வு நிறுவனத்தின் விசேட அறிவித்தல்.**

கொரோனா நோய்க்கிருமி தொற்றின் காரணமாக எமது நிலையத்தில் சேவைகள் பெறும் பயனாளிகளுக்கு சேவையினை தொடர்ச்சியாக வழங்கமுடியாது என்பதை அறியத் தருகின்றோம்.

அவசர நிலையின் போது, கீழ் வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**திருமதி R.நிறோசா**
**(இயன் மருத்துவர் - Physiotherapy)**
**- 076 379 9583**

**செல்வி K.மிதுலா**
**(Clerk) - 077 146 7608**

**திரு R.சரவணபவன்**
**(Foreman) - 077 836 0138**

அத்தோடு மாஹோவில் அமைந்துள்ள எமது தலைமைக் காரியாலயத்திற்கு செல்ல முடியுமானவர்கள் **மாஹோ - 037 227 5351, 037 361 8170** இவ் இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் அவயவங்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல் :
**நிர்வாகம் - மெத்தா புனர்வாழ்வு நிலையம்**

(C-9563)

## கொள்ளைக் கும்பல் அட்டூழியம்

# வயோதிபத் தம்பதியைக் கட்டிவைத்து தாக்கிவிட்டு

# 15 பவுண் நகை, 5 இலட்சம் ரூபாய் பணம் அபகரிப்பு

## சித்திரவதைக்குள்ளான வயோதிபர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

உடுவில் அம்பலவாணர் வீதியிலுள்ள வீடொன்றினுள் புகுந்த கொள்ளைக் கும்பல் வயோதிபத் தம்பதியைத் தாக்கிவிட்டு வீட்டிலிருந்த நகை, பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்றது. இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

இச்சம்பவம்தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீட்டுக்குள் நுழைந்த 3 பேர் கொண்ட கொள்ளைக் கும்பல் வயோதிபத் தம்பதியை கட்டிவைத்து குடும்பத் தலைவரின் தலையில் கூரிய ஆயுதத்தால் குத்தி சித்திரவதை செய்தது. சுமார் 3 மணிநேரம் வீட்டினுள் தேடுதல்வேட்டைநடத்தி 15 பவுண் பெறுமதியான நகைகளுடனும் 5 இலட்சம் ரூபாய் பணத்துடனும் அக்கொள்ளைக் கும்பல்தப்பியது.

கொள்ளையர்கள் மூவரும் 20 தொடக்கம் 24 வயதுக்குட்பட்டவர்களாக இருந்ததாகவும் அவர்களில் ஒருவன் கைகளில் கையுறை அணிந்திருந்ததாகவும் விசாரணையின் போது குடும்பப் பெண் தெரிவித்தார்.

இதன்போது படுகாயமடைந்த குடும்பத்தலைவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மோப்ப நாய்கொண்டு வரப்பட்டு தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. (இ-8-10)

# ராஜகிரியவில் ஒருவருக்கு கொரோனா கந்தகாட்டில் 30 பேர் தனிமைப்படுத்தல்

(கொழும்பு)

கொழும்பு ராஜகிரிய, பண்டாரநாயக்கபுரத்தைச் சேர்ந்த 30 பேர் நேற்றுக் காலை கந்தகாடு தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

குறித்த பகுதியில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்ட நிலையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை வெலிசர வைத்தியசாலையின் விடுதி இலக்கம் 11 மற்றும் 12 இல் தனிமைப் படுத்தப்பட்ட 46 நபர்களை அவர்களது சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இலங்கை விமானப்படையின் ஊடகப் பேச்சாளர் குறூப் கெப்டன் துஷன் விஜேசிங்க,

இந்தக் குழு விமானப்படை அதிகாரிகளின் மேற்பார்வையில் தனிமைப்படுத்தப்பட்ட ஒழுங்கு நடைமுறைகளை நிறைவு செய்துள்ளதாக தெரிவித்தார். (இ-7)

# பொதுத்தேர்தல் வழிகாட்டல் கையேட்டைத் தயாரிக்கும் பணியில் ஆணைக்குழு

(கொழும்பு)

பொதுத் தேர்தலை நடத்துவதற்கான வழிகாட்டல் கையேட்டை தயாரிக்கும் பணியில் தேர்தல்கள் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது.

அதன்படி சுகாதார அதிகாரிகளுடன் தேர்தல்கள் ஆணைக் குழு கலந்துரையாடல்க்ளை நேற்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பித்தது.

வேட்புமனுக்கள் கையேற்கப்பட்ட சில தினங்கள் அரச பொது விடுமுறை தினங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தமையால், ஏற்கப்பட்ட வேட்புமனுக்களின் செல்லுபடித்தன்மை தொடர்பில் சிக்கல் ஏற்பட்டிருந்தது. அதாவது பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட மார்ச் மாதம் 17, 18, 19 ஆம் திகதிகளை விசேட அரச பொது விடுமுறையாக அறிவித்து வர்த்தமானி வெளியிடப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு, சட்ட வியாக்கியானத்தைக் கோரியதையடுத்து, 2020 ஆம் ஆண்டிற்கான பொதுத்தேர்தலுக்கான ஏற்பாடுகளைத் தற்போதுள்ள சட்டங்களைப் பின்பற்றி முன்னெடுத்துச் செல்லுமாறு சட்டமா அதிபரால் அறிவிக்கப்பட்டது.

மேலும் 2020 ஆம் ஆண்டிற்கான பொதுத் தேர்தலுக்குரிய வேட்புமனுக்களை ஏற்று, அது தொடர்பான ஆரம்பகட்ட செயற்பாடுகளைத்தேர்தல்கள்ஆணைக் குழு ஆரம்பித்துள்ளதை தாம் அவதானித்ததாக சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா குறித்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து தேர்தலை நடத்துவது தொடர்பான கையேட்டினைத் தயாரிக்கும் பணியில் தேர்தல்கள் ஆணைக் குழு இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உயர்தர மாணவர்களுக்காக முதலில் பாடசாலையை ஆரம்பிக்கத்திட்டம்

(கொழும்பு)

பாடசாலைகளை மீளத் திறப்பதற்கான திகதியை தீர்மானித்ததன் பின்னர், கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதற்கான செயற்றிட்டமொன்று தொடர்பாக கல்வி அமைச்சு மாகாண மட்டத்தில் கலந்துரையாடல்களை ஆரம்பித்தது.

கல்வி அமைச்சின் செயலாளர், எம்.எச்.எம். சித்திராநந்த இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

தென், வடமத்திய மற்றும் வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர்களுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடியதாகவும், ஊவா மற்றும் மத்திய மாகாணங்களின் அதிகாரிகளுடன் இது தொடர்பாக விரைவில் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் முப்படைகள் மற்றும் சுகாதாரத் துறையினரைப் பயன்படுத்தி அனைத்து பாடசாலைகளையும் தொற்று நீக்கம் செய்வதோடு டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது.

இதேவேளை, தரம் 13 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை முதலில் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக தேசிய பாடசாலைகள் பணிப்பாளர், கித்சிரி லியகே தெரிவித்தார்.

க.பொ.த உயர்தரம், அதன் பிறகு சாதாரண தரம், தரம் 10 மாணவர்கள் அதன் பின்னர் ஏனைய மாணவர்கள் என்ற ரீதியில் பாடசாலையை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

### பாராளுமன்றை கூட்ட மறுக்கும்

# கோட்டாபயவுக்கு மறக்க முடியாத பாடம் கற்பிக்கப்படும்

### அமிர தேரர் எச்சரிக்கை



(கொழும்பு)

பழைய பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்காவிட்டால், அவருக்கு மறக்க முடியாத பாடத்தை கற்பிக்கப் போவதாக தம்பல அமிர தேரர் தெரிவித்தார்.

நாட்டில் காணப்படும் அசாதாரண நிலைமைக்கு அமைய கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தைக் மீண்டும் கூட்டி ஜனாதிபதி, ஜனநாயகமாகச் செயற்பட வேண்டும். அப்படி செய்யவில்லை என்றால் ஜனாதிபதிக்கு மறக்க முடியாத பாடம் கற்பிக்கப்படும் எனவும் தம்பர அமில தேரர் தெரிவித்தார். நேற்றுக் காலை இணையத்தளம் மூலமாக ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலைமையில் அந்த வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த தேவையான நிதி ஒதுக்கீடுகளை சட்டரீதியாக மேற்கொள்ள உடனடியாக பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

எனினும் கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தைத் எந்த வகையிலும் மீண்டும் கூட்டப் போவதில்லை என ஜனாதிபதி, உறுதியாகத் தெரிவித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புதிதாக வேட்புமனு கோரப்பட வேண்டும்

### தென்னக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல்களுக்காக புதிதாக வேட்பு மனுக்கள் கோரப்பட வேண்டுமென கபே அமைப்பின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளரும் முன்னாள் ஆளுநருமான ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

நேற்று ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1981 ஆம் ஆண்டு தேர்தல் சட்டத்தின் பிரகாரம் இவ்வாறு வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதி அரச விடுமுறை என்பதால் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனவும் இது தொடர்பில் தொலைபேசி உரையாடல் பதிவு ஆதாரங்கள் உண்டு எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான பின்னணியில் அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்ட மார்ச் மாதம் 17, 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் மட்டும் எவ்வாறு வேட்பு மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது என அவர் கேள்வி எழுப்பினார்.

சின்னச் சின்ன பிழைகளுக்காக வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும் இந்த நாட்டில் விடுமுறை தினத்தில் வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ள அனுமதிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் மரணம் கொரோனாவால் அதிரும் உலக நாடுகள்

(ஜெனீவா)

உலகம்முழுவதும்கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2 இலட்சத்து 50 ஆயிரத்தைக் கடந்தது.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரிலுள்ள ஒரு சந்தைப் பகுதியிலிருந்து கடந்த ஆண்டு டிசெம்பர்மாதம்கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 210 நாடுகளுக்கு பரவி பெரும் மனித உயிரிழப்புகளைக் ஏற்படுத்தி வருகிறது.

கொரோனாவைக் குணப்படுத்தும் வகையிலான தடுப்பு மருந்தை கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும் இந்த வைரஸின் தாக்கமும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.


இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு பலியானோர் எண்ணிக்கை 2 இலட்சத்து 50 ஆயிரத்தைக் கடந்தது.

நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி, 36 இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு கொரோனா பரவியது. வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் 21 இலட்சத்து 84 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 50 ஆயிரம் பேரின் நிலைமை கவலைக்கிடமாக வுள்ளது. வைரஸ் பரவியவர்களில் இதுவரை 11 இலட்சத்து 69 ஆயிரத்து 405 பேர் சிகிச்சைக்குப் பின் குணமடைந்தனர்.

ஆனாலும், இந்தக் கொடிய கொரோனாவுக்கு உலகம் முழுவதும் பலியானோர் எண்ணிக்கை 2 இலட்சத்து 50 ஆயிரத்து 70 ஆக அதிகரித்தது.

கொரோனாவுக்கு அதிக உயிரிழப்பை சந்தித்த நாடுகள்:-

அமெரிக்கா - 69,008, இத்தாலி - 29,079, இங்கிலாந்து - 28,734 , ஸ்பெயின் - 25,428, பிரான்ஸ் - 24,895,பெல்ஜியம் - 7,924,பிரேசில்- 7,051, ஜேர்மனி - 6,866, ஈரான் - 6,277, நெதர்லாந்து- 5,082,சீனா - 4,633, கனடா - 3,767, துருக்கி - 3,397, சுவீடன் - 2,769, மெக்சிக்கோ - 2,154 சுவிட்சர்லாந்து- 1,779, ஈக்குவடோர் - 1,564 என்பனவாகும். (இ-7)



## தமிழ்த் தேசிய உணர்வாளர் பிரதாபனுக்கு இறுதி வணக்கம்

(லண்டன்)

பிரித்தானிய தலைநகர் லண்டனில் வாழ்ந்துவந்த தமிழ்த் தேசிய உணர்வாளரும், தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு உதவித் திட்டங்களுக்குத் தொடர்ந்து உதவிவந்தவருமான லோகசிங்கம் பிரதாபனின் மறைவு எம்மைத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

கொரோனா கொல்லுயிரித் தொற்றால் நோய்வாய்ப்பட்டிருந்த அவர் லண்டனிலுள்ள மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

யாழ்.இந்துக் கல்லூரியில் கல்விகற்ற பிரதாபன், பல வருடங்களாக அதன் பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் கிளையின் செயற்குழு உறுப்பினராகச் செயற்பட்டுவந்தார். தனித்து அக்கல்லூரிக்கு உதவுவதுடன் நின்றுவிடாது வடபகுதியில் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தொடர்ந்து உதவி வந்தார். பிரித்தானியாவில் வாழும் தமிழ் இளையவர்கள் விளையாட்டுத்துறையில் ஈடுபடுவதனை ஊக்குவிக்குமுகமாக பிரித்தானிய தமிழ் விளையாட்டுச் சபை என்ற அமைப்பை உருவாக்குவதில் பிரதாபன் முக்கிய பங்காற்றினார். அதன் தலைவராகச் செயற்பட்டுவந்த அவர் இவ்வமைப்பினூடாக தாயகத்தில் விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் தொடர்புகளைப் பேணிவந்த பிரதாபன் முன்னணியானது ஐரோப்பாவில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுடனும் அங்கு செயற்படும் தேசியச் செயற்பாட்டாளர்களுடனும் தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கு உதவினார். விளையாட்டுத்துறை தவிர்ந்து தமிழ்ச் சமூகத்திற்கான நற்பணிகளில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதுடன் பல்வேறு செயற்றிட்டங்களுக்கு நிதிப் பங்களிப்பினையும் வழங்கி வந்தார்.

பிரதாபனின் இழப்பு பிரித்தானிய வாழ் தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்தத் தமிழ்ச்சமூகத்திற்கும் பேரிழப்பாக அமைகிறது. அன்னாரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர், நண்பர்களுக்கும், தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் என அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

### ஒரேநாளில் 195 பேர் மரணம்

## இந்தியாவில் கொரோனாவால் உயிரிழப்பு 1568 ஆக உயர்வு



(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 46 ஆயிரத்தைக் கடந்த நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1568 ஆக உயர்ந்தது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறி உள்ளவர்களைத் தனிமைப்படுத்தி சிகிச்சையளித்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

தற்போது கொரோனா பாதிப்பு குறைவாகவுள்ள பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

எனினும் பரிசோதனைகளை அதிகரிக்க அதிகரிக்க, புதிய நோயாளிகளின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது. உயிரிழப்பும் கணிசமாக உயர்கிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்று வெளியிட்ட தகவலின் படி, இந்தியாவில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 46 ஆயிரத்தைக் கடந்தது. மொத்தம் 4 6ஆயிரத்து 433 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். நேற்றுக்காலை 9 மணியளவில் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 3900 பேருக்கு நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டது.

195 பேர் உயிரிழந்தனர். இதன்மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1568 ஆக உயர்ந்தது. 12 ஆயிரத்து 727 பேர் கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டனர்.

கொரோனா பாதிப்பில் மகாராஷ்டிரா தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. அங்கு மொத்தம் 14 ஆயிரத்து 541 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. 583 பேர் பலி யாகினர்.

குஜராத்தில் 5804 பேருக்கும், டில்லியில் 4898 பேருக்கும், தமிழகத்தில் 3550 பேருக்கும், மத்திய பிரதேசத்தில் 2942 பேருக்கும், ராஜஸ்தானில் 3061 பேருக்கும், உத்தர பிரதேசத்தில் 2766 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ரஷ்யாவில் அதிகரிக்கும் கொரோனா பாதிப்பு இரண்டாவது நாளாக பத்தாயிரத்தைத் தாண்டியது

(மொஸ்கோ)

ரஷ்யாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இரண்டாவது நாளாக அங்கு கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 10 ஆயிரத்தைத் தாண்டியது.

சீனாவிலுருவான கொரோனா வைரஸின் தாக்கம் உலகம் முழு வதும் அதிகரித்து வருகிறது.

நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 36 இலட்சத்தைத் தாண்டியது. மேலும் கொரோனா நோய்த் தொற்றுக்கு இதுவரை 2 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

ரஷ்யாவில் கொரோனா வைரஸ் மின்னல் வேகத்தில் பரவி வருகிறது.

அதன்படி அந்த நாட்டில் கொரோனா பாதித்த வர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 40 ஆயிரத்தைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது.



இந்நிலையில், நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக ரஷ்யாவில் புதிதாக 10 ஆயிரத்து 581 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனால் அங்கு கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போது ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 268 ஆக உயர்ந்தது. மேலும் வைரஸ் தொற்றுக்கு 76 பேர் உயிரிழந்ததால், அங்கு பலியானோர் எண்ணிக்கை 1,356 ஆக உயர்ந்தது. (இ-7)

## இராசிபலன்

06.05.2020
சித்திரை 23, புதன்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 7.27 மணிவரை
சித்திரை பிற்பகல் 1.15 மணிவரை
சுபநேரம் 4.26–5.56 மணிவரை
இராகுகாலம் 11.56–1.26 மணிவரை
சந்திராஷ்டமம்– உத்திரட்டாதி, ரேவதி
சித்திரைச் சித்திரை


மேஷம்

மறக்க முடியாத இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவீர்கள், உடல் நலம் சீராகும், போசன நன்மையுண்டு.


ரிஷபம்

உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கௌரவமான நாள்.


மிதுனம்

பிரியமான சிலருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


கடகம்

தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.


சிம்மம்

ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கன்னி

தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு, சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.


துலாம்

தேசநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.


விருச்சிகம்

சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.


தனுசு

தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


மகரம்

ஆடம்பரப் பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


கும்பம்

நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மீனம்

குடும்பத்தில் சிறு சிறு விவாதங்கள் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம் திருடன் பயமுண்டு.

உயிர் இருக்கும் வரை நம்பிக்கையும் இருக்கும்.

# உப அஞ்சல் அலுவலகங்களில் கிருமித் தொற்று நீக்கக் கோரிக்கை

(கொழும்பு)

உப அஞ்சல் அலுவலகங்களில், கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, அகில இலங்கை தமிழ் பேசும் உப தபால் அதிபர்கள் தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்தது.

இது தொடர்பாக அஞ்சல்மா அதிபதி ரஞ்சித் ஆரியரத்னவுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று காரணமாக, தபால் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தது. தற்போது தபால் சேவை வழமை நிலைக்குத் திரும்பியுள்ள நிலையில், உப அஞ்சல் அலுவலகங்களில் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கையோ, கைகழுவுவதற்குரிய வசதிகளோ ஏற்படுத்தப்படவில்லையெனவும், உப அஞ்சல் அலுவலகத்தில் கடமையாற்றும் உபஅஞ்சல் அதிபர், சிற்றூழியர்களுக்கு இதுவரையில் முககவசம், கையுறை என்பன வழங்கப்படவில்லையெனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

அஞ்சல் அலுவலகங்களில் இவ்வாறான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தும் உப அஞ்சல் அலுவலகங்களில் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டது. அஞ்சல் அலுவலகங்களுக்கு இவ் அசாதாரண சூழ்நிலையில் வழங்கப்பட்ட வசதிகளைப் போன்று உப அஞ்சல் அலுவலகங்களுக்கும் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. (இ-7)

## குடும்பஸ்தர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(வெல்லாவெளி)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லா வெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 35 ஆம்கிராமம்பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பகல் கன்னியெம்பை அணைக்கட்டுப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

40 வயதுடைய 3பிள்ளைகளின் தந்தையான சி.வேலசுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்தார். கண்டெடுக்கப்பட்ட சடலம்களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை வெல்லா வெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி

### திரு.பொன்னன் குணரத்தினம்



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி.தயாநிதி திருக்குமரன்
அவர்களின் மாமனார்
திரு.பொன்னன் குணரத்தினம் அவர்கள்
இறைபதமடைந்ததையிட்டு
அன்னாரின் குடும்பத்தினரின் துயரத்தில்
பங்கு கொள்வதுடன்
கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டி நிற்கின்றோம்

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி. (2694)

## மரண அறிவித்தல்

### திருமதி.சரவணமுத்து தனலட்சுமி



மண்ணில் 30.06.1937 விண்ணில் 05.05.2020

நல்லூரைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து தனலட்சுமி அவர்கள் 05.05.2020 நேற்று காலமானார்.

அன்னார் இளைப்பாறிய தபாலதிபர் க. சரவணமுத்து வின் அன்பு மனைவியும் சாரதாலட்சுமி, சாந்தினி (ஆசிரியை நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை), சறோஜினி (யூனியன் அஸ்யூரன்ஸ், சுன்னாகம்), சத்தியதேவி (யாழ். போதனா வைத்தியசாலை சத்திரசிகிச் சைக் கூடம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுந்தர கணேசன், வரகுகநேசன், விஜய லட்சுமி ஆகியோரின் சகோதரியும், சிவசம்பு, நாகலிங்கம், அருணாசலம், சிவநாகம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.05.2020 (நேற்று) நீர்வேலி சியாக்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி

தகவல் -க.சரவணமுத்து கணவர்
(ஓய்வு நிலை தபால் அதிபர்)

(சி-9562)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர்.வைத்திலிங்கம் சிற்றம்பலம்

(ஓய்வு நிலை எழுதுநர்)



கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவனும்,
கொக்குவில் இந்துக்கல்லூரியில்
எழுதுநராக பல தசாப்தங்களாக
அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய
அன்னாருக்கு எமது அஞ்சலியைத்
தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் இழப்பால்
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்.

# வடக்கு மாகாணத்தின் க.பொ.த. (சா/த) 2019 பரீட்சைப் பெறுபேறுகள்- ஒரு பார்வை

அண்மையில் வெளிவந்த 2019 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சை முடிவுகளில் வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் எப்படியிருக்கின்றன என்பதை அறிய இப்பகுதி மக்கள் மிகவும் ஆவலாகவுள்ளனர்.

தேசிய ரீதியில் இப்பரீட்சை வழியாக க.பொ.த. (உ/த) கற்கத் தகுதி பெற்றோர் விகிதாசாரம், வடக்கு மாகாணத்தின் தகுதி பெற்றோர் விகிதாசாரம், நாட்டில் முதலாவதாக வந்த தென்மாகாணத்தின் நிலை அறிய மக்கள் விரும்புகின்றனர்.

அட்டவணை-I இல் தேசிய, வடக்கு மற்றும் தேசிய மாகாணங்களின் அடைவு மட்டங்கள் இவைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | தேசிய அடைவு சதவீதம் | வடக்கு மாகாண அடைவு சதவீதம் | தென் மாகாண அடைவு சதவீதம் | தேசிய வ.மா வேறுபாடு% | வடக்கு/தெற்கு மாகாண வேறுபாடு % |
|---|---|---|---|---|---|
| 2014 | 69.02 | 64.19✧ | 73.08 | 4.83 | 8.89 |
| 2015 | 69.33 | 60.38✧ | 75.21 | 8.95 | 14.74 |
| 2016 | 69.94 | 60.66✧ | 76.66 | 9.28 | 16.52 |
| 2017 | 73.05 | 66.12✧ | 79.41 | 6.93 | 13.29 |
| 2018 | 75.09 | 69.99♦ | 80.42 | 5.1 | 10.43 |
| 2019 | 73.84 | 67.74✧ | 78.32 | 6.1 | 5.57 |

✧கடைசி நிலை ♦8 ஆவது நிலை மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

தேசிய அடைவுக்கும் வடக்கு மாகாணத்தின் அடைவுகளுக்கும் இடையில் காணப்பட்ட வேறுபாடுகள் 2015 இல் குறைவடைந்து வந்து 2019 இல் 6.1 வீதமாக இருந்தது. முதலாவது மாகாணமான தென் மாகாணத்திற்கும் வடக்கு மாகாணத்திற்கும் இடையில் காணப்பட்ட வேறுபாடு 16.52 வீதத்தில் இருந்து 2019 இல் 5.57 வீதமாகக் குறைந்துள்ளது.

வடக்கு மாகாணம் வகுதி நிலையில் 9 ஆவது இடத் தைப் பெற் றிருந்தாலும் 67.74 வீதம் க.பொ.த. உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2019 இல் வடக்கு மாகாணத்தில் இருந்து 16,622 மாணவர்கள் பரீட்சைக்கு முதல் முறை தோற்றி 11,259 பேர் (67.74%) க.பொ.த (உ/த) கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் தாய்மொழி, கணிதம் உட்பட ஆறு அல்லது அதற்குக் கூடிய பாடங்களில் சித்தி பெற்று இதற்குள் 3C சித்தியும் பெற்றவர்கள் எண்ணிக்கை 10,106 பேர் (60.8%) ஆகும்.

இந்த இரண்டு பிரிவுகளுக்கு இடையேயுள்ள வேறுபாடு 11,259-10, 106=1153 பரீட்சை எடுத்த மாணவர்களுள் 6516 பேர் க.பொ.த (உ/த) கற்கவோ அல்லது அரச தொழிற்றுறைகளில் சேரவோ தகுதி பெறவில்லை. மேலும் 438 பேர் 2.63% எல்லாப் பாடங்களிலும் சித்தி பெறவில்லை என்பது பெரிய கவலை தரும் செய்தியாகும்.

வடக்கு மாகாணத்திற்குள் மாவட்ட அடிப்படையில் அடைவு மட்டத்தில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அட்டவணை-II இன் தரவுகளை நோக்குமிடத்து இவ்வேறுபாடுகளை அடையாளம் காண முடியும்.

அட்டவணை-II

| மாவ. வகுதி நிலை | மாவட்டம் | பரீட்சைக்கு தோற்றியோர் | க.பொ.த.(உ/த) கற்க தகுதி பெற்றோர் | தாய்மொழி கணிதம் உட்பட 3சி | எடுத்த எல்லாப்பாடங்களிலும் சித்தி பெறவில்லை |
|---|---|---|---|---|---|
| 07 | மன்னார் | 1607 | 1200 (74.52) | 1021 (63.53) | 20 (1.24) |
| 19 | யாழ்ப்பாணம் | 8520 | 5902 (69.27) | 5421 (63.63) | 204 (2.39) |
| 21 | வவுனியா | 2545 | 1727 (67.70) | 1505 (57.14) | 58(2.28) |
| 24 | முல்லைத்தீவு | 1696 | 1070 (63.09) | 947 (55.84) | 68 (4.01) |
| 25 | கிளிநொச்சி | 2254 | 1364 (60.51) | 1212 (53.77) | 88(3.90) |

மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

வடக்கு மாகாணத்தின் மன்னார் மாவட்டத்தின் முன்னேற்றம் சிறப்பாகவுள்ளது. 2018 இல் மன்னார் மாவட்டம் நாட்டில் 9 ஆவது இடத்திலிருந்து 2019 இல் 7 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

வவுனியா மாவட்டம் 2018 இல் 15 ஆவது இடத்திலிருந்து 2019 இல் 21 ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் 18 ஆவது இடத்திலிருந்து 19 ஆவது இடத்திற்கும் முல்லைத்தீவு மாவட்டம் 23 ஆவது இடத்திலிருந்து 24 ஆவது இடத்திற்கும் பின் தள்ளப்பட்டுள்ளது. கிளிநொச்சி 2018 இலும் 2019 இலும் 25 ஆவது இடத்திலேயேயுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 12 கல்வி வலயங்கள் இருக்கின்றன. கல்வி வலயங்களுக்கிடையேயும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன.

அட் டவணை-III இல் வலய அடிப் படையில் க.பொ.த. (சா/த) 2019 பெறுபேறுகள் தரப்பட்டுள்ளன.

| தேசி. நிலை. வ.நி | மாவட்டம் | 5+ பாட. தோற்றியோர் எண்ணிக்கை | க.பொ.த.உ/த கற்கத் தகுதி பெற்றோர் | தாய்மொழி கணிதம் உட்பட 6 பாட.அல். கூடிய பாட. 3 சி சித்தியுடன் | தோற்றிய எல்லாப் பாடங்களிலும் சித்தி பெறவில்லை (6+பாடங்கள்) |
|---|---|---|---|---|---|
| 16 | மன்னார் | 1207 | 931 (77.13) | 797 (66.03) | 13 (1.08) |
| 22 | யாழ்ப்பாணம் | 3028 | 2287 (75.86) | 2109 (69.05) | 40 (1.32) |
| 46 | வடமராட்சி | 1460 | 1063 (72.81) | 989 (67.74) | 35 (2.40) |
| 68 | வவுனியா தெற்கு | 2049 | 1410 (68.81) | 1241 (60.57) | 46 (2.24) |
| 73 | மடு | 400 | 269 (67.25) | 224 (56.00) | 7 (1.75) |
| 80 | தென்மராட்சி | 867 | 571 (65.86) | 538 (62.05) | 21 (2.42) |
| 85 | முல்லைத்தீவு | 1206 | 786 (65.17) | 701 (58.13) | 43 (3.56) |
| 89 | வலிகாமம் | 2588 | 1665 (64.34) | 1522 (58.81) | 81 (3.13) |
| 92 | வவுனியா வடக்கு | 496 | 313 (63.10) | 264 (53.23) | 12 (2.42) |
| 94 | கிளிநொச்சி | 2254 | 1364 (60.51) | 1212 (53.77) | 88 (3.99) |
| 97 | துனுக்காய் | 490 | 284 (57.96) | 240 (50.20) | 25 (5.10) |
| 99 | தீவுகள் | 577 | 306 (53.03) | 263 (45.58) | 27 (4.68) |

மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இலங்கையில் 99 கல்வி வலயங்கள் இருக்கின்றன. இக்கல்வி வலயங்களில் பெறுபேறு அடிப்படையில் முதல் 15 வலயங்களுள் வடக்கு மாகாணக் கல்வி வலயங்கள் ஒன்றும் வரவில்லை.

வடக்கு மாகாண மொத்த 12 கல்வி வலயங்களுள் 7 கல்வி வலயங்கள் 80 ஆவது இடத்திற்குப் பின்னராகவே இருக்கின்றன.

தீவக கல்வி வலயம் நாட்டிலுள்ள 99 கல்வி வலயங்களுள் 99 ஆவது இடத்தில் இருப்பது பெரும் கவலை தரும் நிகழ்ச்சியாகவுள்ளது.

வடக்கு மாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களில் 322 மாணவர்கள் A சித்தி பெற்றுள்ளனர். யாழ்ப்பாணம்-115, வடமராட்சி-53, வவுனியா தெற்கு-36, வலிகாமம்-33, கிளிநொச்சி-27, மன்னார்-26, முல்லைத்தீவு-18, தென்மராட்சி-13, மடு-01, துணுக்காய்-00, தீவுகள்-00, வவுனியா வடக்கு-00 நாட்டில் க.பொ.த (சா/த) 2019 இல் 10201 பேர் 9A சித்திகள் பெற்றுள்ளனர்.

வடக்கு மாகாணத்திலிருந்து பரீட்சை எடுத்த மாணவர்கள் விகிதாசாரம் 5.4 வீதமாகும். விகிதாசார அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் 551 மாணவர்கள் 9 பாடங்களில் A சித்தி பெற்றிருக்க வேண்டும். ஆனால் 3.15 வீதமே வடக்கு மாகாண மாணவர்கள் பெற்றுள்ளனர்.

வடக்குமாகாணத்தின் கபொத (சா/த) 2019 பெறுபேறுகள் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் பொழுது குறைவாக இருப்பதற்குக் காரணங்கள் என்ன? இக் குறைபாடுகளை நீக்க முடியாதா? எனப் பல கேள்விகள் எழுந்துள்ளன.

வடக்கு மாகாணத்தின் க.பொ.த. (சா/த) பெறுபேறுகள் 2019 இல் மாத்திரமல்ல 2014 ஆம் ஆண்டிலிருந்து குறைவாகவே இருக்கின்றன. இம் மாகாணம் 2014, 2015, 2016, 2017, 2019 ஆம் ஆண்டுகளில் கடைசி நிலையையும் 2018 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தை (0.02%) பின்னுக் குத்தள்ளி 8 ஆவது இடத்திற்கு முன்னேறியிருந்தது.

வடக்கு மாகாணக் கல்வி நிலையை ஆராய்ந்தால் இம் மாகாணத்திலுள்ள பாடசாலைகள் 10 இலட்சம் மாணவர்களுக்கான உட்கட்டமைப்புக்களைக் கொண்டுள்ளதென முன்னாள் மாகாணக் கல்வியமைச்சர் கலாநிதி சர்வேஸ்வரன் குறிப்பிடுவது வழக்கம்.

இத்தகைய பௌதீக வளங்களைக் கொண்டிருக்கின்ற பொழுதும் இம்மாகாணத்தின் மாணவர்கள் எண்ணிக்கை 250,000 வரையிலேயே இருப்பதால் இங்கு இடநெருக்கடி கிடையாது.

மேலும் இம்மாகாணத்தில் 13 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆசிரியர், மாணவர் விகிதம் உயர்வாக இருப்பினும் வளப்பங்கீடு சரியான முறையில் பேணப்படவில்லை என்ற



பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

குற்றச்சாட்டும் நிலவுகிறது. இது மாணவர்களின் கல்வியைப் பாதிக்கிறது.

நகர்ப்புற மற்றும் அபிவிருத்தியான பகுதிகளில் கூடுதலான ஆசிரியர்கள் காணப்படுவதாகவும் பின்தங்கிய பகுதிகளில் ஆசிரியர்கள் குறைவாகக் காணப்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

சில பாடசாலைகளில் கணிதம், ஆங்கிலம் கற்பிக்க பல காலம் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமை, இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் வெற்று நிரப்ப எடுக்கும் நீண்ட காலம் மாணவர்களின் கல்வியைப் பாதிக்கின்றன.

தினமும் நீண்டதூரம் பயணம் செய்து கற்பிக்கும் ஆசிரியர்கள், கற்பித்தல் செயற்பாடு திருப்திகரமாக இல்லை என்பதும் ஒரு குற்றச்சாட்டாகும். கிளிநொச்சி, துணுக்காய், தீவுகள் கல்வி வலயங்கள் பாதிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றன.

ஆசிரியர்கள் பல்வேறு கல்விசார் படிவங்களை நிரப்ப வேண்டியதால் அதில் அதிக நேரம் செலவழிக்க வேண்டியிருப்பதால் மாணவர்களுடன் தங்கள் நேரத்தைச் செலவிட முடியாமல் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இதில் சில உண்மையிருப்பினும் இது நாடு தழுவிய நிலையில் இருக்கும் செயற்பாடாகும்.

பௌதீகவளம், ஆசிரியர் கற்பித்தலில் காணப்படும் குறைபாடுகள், கல்வி சார்ந்த குறைகள் மாணவர்களின் க.பொ.த. அடைவு மட்டத்தை தீர்மானிப்பதில் சிறியளவே பங்கு வகிக்கின்றன.

வடக்குமாகாணத்தில் கபொத (சா/த) பரீட்சை 2019 அடைவு மட்டம் குறைவாக இருப்பதற்கு பெற்றோரையே பிரதானமாக குறை கூறவேண்டும். வடக்கு மாகாணத்தின் சமூகக் கட்டமைப்பில் மத்திய தரப் பிரிவினரின் விகிதாசாரம் மிகவும் குறைந்து விட்டது.

இம்மாகாணத்தில் அரச துறையிலேயே ஒழுங்குபடுத்தப்பட்ட தனியார் துறையில் (Private Organized Sector) வேலை செய்வோர் எண்ணிக்கை மிக மிகக் குறைவு.

(7 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு மாகாணத்தின்...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாகாணத்தில் விவசாயம், மீன்பிடி, சிறு வர்த்தகம் மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத துறைகளில் வேலை செய்வோரே அதிகம்.

இப்பொருளாதார சூழ்நிலையில் இவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் கரிசனை செலுத்துவது குறைவதுடன் பாடசாலைச் செயற்பாடுகளிலும் கவனிப்பு இல்லை.

இம்மாகாணத்தில் கல்விச் செயற்பாடுகளில் பெற்றோரின் ஈடுபாடு குறைவாக இருப்பது பரீட்சை அடைவு குறைவாக இருப்பதற்கு முக்கிய காரணமாகும்.ஏனைய காரணிகளும் சிறிதளவு பங்களிப்புச் செய்திருக்கலாம்.

வடக்கு மாகாணத்தில் க. பொ.த. (சா/த) 2019 இல் பரீட்சை எழுதிய மாணவர்களில் 67.74 வீதத்தினர் க.பொ.த.(உ/த) கற்கத் தகுதி பெற்றுள்ளனர்

இவர்கள் தங்களது ஆற்றல், விருப்பம் மற்றும் கற்க இருக்கும் பாடசாலை அமைவிடம் போன்ற பல்வேறு காரணிகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து பொருத்தமான பாடப்பிரிவை தெரிவு செய்ய வேண்டும்.

க.பொ.த. (உ/த) இல் தற்போது விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம், வர்த்தகம், கலை எனப் பிரிவுகள் உள. இதே போல் இப்பிரிவுகளுள் பாடங்களைத் தெரிவு செய்வதில் கவனம் எடுக்க வேண்டும்.

இம் மாகாணத்தில் க.பொ.த. (உ/த) கற்கத் தகுதி பெற்ற 11,259 பேரும் க.பொ.த. (உ/த) வகுப்பில் இருக்க வேண்டுமென்பதே எமது விருப்பம்.

இம்முறை க.பொ.த. (சா/த) பரீட்சையில் க.பொ.த. (உ/த) கற்கத் தகுதி பெறாதோர் இரண்டாவது முறை 2020 இல் பரீட்சை எடுக்க தங்களைத் தயார்படுத்த வேண்டும். ஒருமுறை பரீட்சையில் சித்தியடையா விட்டால் எல்லாம் முடிந்துவிட்டது என முடிவு எடுக்கத் தேவையில்லை. க.பொ.த. (சா/த) பரீட்சையில் 2ஆம், 3 ஆம் முறை சித்தி பெற்று சாதனை படைத்தவர்கள் நம்மிடையே பலர் உளர் என நினைத்துக் கொள்ளுங்கள்.

2 ஆவது முறை க.பொ.த. (சா/த) பரீட்சை எடுக்க விருப்பமில்லாதவர்கள் பாடசாலைகளில் நடைபெறும் தொழில்நுட்பக் கல்விப் பிரிவில் இணைந்து பாடசாலைக் கல்வியை ஆண்டு 13 வரை தொடரலாம்.

முறைசார்ந்த கல்வியைத் தொடர விருப்பம் குறைந்த மாணவர்கள் தொழில்சார் கல்வியைத் தொடரும் வாய்ப்புக்கள் இருக்கின்றதென்பதை அறிந்து கொள்ளும். **NVQ (National Vocational Qualification)** 7 கட்டங்களைக் கொண்டது.

இதில் **NVQ 1,2,3** நீங்கள் வேலை செய்யும் நிறுவனங்களில் பெறும் பயிற்சி மூலம் பெற்றுக் கொள்ளலாம். **NVQ-4** ஐப் பெறத் தொழில்நுட்பக் கல்லூரியில் கற்க முடியும். **NVQ-5,6** ஐ பல்கலைக்கழகக் கல்லூரியில் படித்துப் பெற்று **NVQ-7** பட்டப்படிப்பை இரத்மலானையிலுள்ள பல்கலைக் கழகத்தில் படித்து முடிக்கலாம்.

க.பொ.த. (சா/த) பூர்த்தி செய்யாத மாணவர்களுக்கு பல்வேறு அரச நிறுவனங்களால் பல்வேறு கற்கைகள் வழங்கப் படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

கல்வியில் முன்னிலை பெற்றிருந்த யாழ்ப்பாணம் இன்று தனது பழைய பெருமையை இழந்து நிற்பது எமக்குப் பல பெரும் கவலை தருகின்றது. பளையில் 400 ஆண்டுகளாக இயங்கும் ஒரு பாடசாலை இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மேலும் 200, 175, 150, 125, 100, 75, 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த புகழ்பூத்த பல கல்லூரிகள் வடக்கு மாகாணத்தில் இருக்கின்றன. இந்நிறுவனங்கள் புத்துணர்வு பெற்று பெற்றோர், கல்வியாளர்கள் மற்றும் பரோகாரர்களையும் இணைத்து செயலில் இறங்கினால் நாம் இழந்த இடத்தை, பெருமையை ஓரிரு ஆண்டுகளில் பெறமுடியும்.

# மக்களுக்குத் தேவையான அனைத்து நிவாரண நடவடிக்கைகளும் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தொற்று எமது நாட்டில் அடையாளம் காணப்பட்ட நாள் முதல் அதற்கெதிரான பல்வேறு வேலைத்திட்டங்களை ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம் கொவிட்-19 க்கான ஜனாதிபதி செயலணி, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சு மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் வழிகாட்டுதல்களின் கீழ் பருத்தித்துறை பிரதேச செயலகம் நடைமுறைப் படுத்தி வருகின்றது.

அவ்வகையில் பொதுமக்களின் அத்தியாவசிய சேவைகள் எவ்வித தடையுமின்றி எமது பிரதேசத்தில் கிடைக்கச் செய்வதுடன் பொது மக்களுக்குத் தேவையான நிவாரண நடவடிக்கைகள் ,பொது மக்கள் போக்குவரத்துக்கான அனுமதிகள், அத்தியாவசிய சேவைகளை வழங்குபவர்களுக்கான அனுமதி என்பவற்றுடன் பொது மக்களுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

அந்தவகையில் 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கான கொடுப்பனவு-1661 பயனாளிகளுக்கு 8,3 இலட்சத்து ஐந்தாயிரத்தம் ரூபாயும் மாற்றுவலுவுடையநபர்களுக்கான கொடுப்பனவு-609 பயனாளிகளுக்கு 3,0 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாயும் சிறுநீரக பாதிப்புக்குள்ளானவர்களுக்கான கொடுப்பனவு-26 பயனாளிகளுக்கு ஒரு இலட்சத்து 30,ஆயிரம் ரூபாயும் சமுர்த்திக் கொடுப்பனவு - 6091 பயனாளிகளுக்கு 3 கோடியே 4 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாயும் நலிவுற்ற குடும்பங்களுக்கான கொடுப்பனவு -3082 குடும்பங்களுக்கு ஒரு கோடியே 54 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயும் விவசாய ஓய்வூதியக் கொடுப்பனவு-164 குடும்பங்களுக்கு 8 இலட்சத்து 20, ஆயிரம் ரூபாயும் கடற்றொழில் ஓய்வூதியக் கொடுப்பனவு-121 குடும்பங்களுக்கு 6 இலட்சத்து ஐந்தாயிரம் ரூபாயும் ஆக மொத்தமாக தலா 5000 ரூபாய் வீதம் 11754 குடும்பங்களுக்கு 5 கோடியே 87 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் பொதுசன மாதாந்த உதவிப் பணம் , நோய்களுக்கான கொடுப்பனவு-1738 பயனாளிகளுக்கு 6 இலட்சத்து 55 ஆயிரத்து 950 ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம், பருத்தித்துறை பிரதேச செயலகம் மற்றும் தன்னார்வ தொண்டு அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் 6890 குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இக் கொடிய நோய் பரவுதலுக்கு மத்தியிலும் இரவு பகல் பாராது மிகுந்த சிரமத்தின் மத்தியில் பொது மக்களுக்கு சிறப்பாக சேவையாற்றி பொது மக்களுக்கு உதவித் திட்டங்களைப் பெற்றுக் கொடுத்துள்ளார்கள். எதிர்காலங்களிலும் பொது மக்களுக்கு சிறந்த சேவையினை எமது பிரதேச செயலகமும் உத்தியோகத்தர்களும் வழங்குவார்கள் என்பதை இத் தருணத்தில் உறுதிப்பட கூறிக்கொள்வதோடு பொது மக்களாகிய உங்களுடைய பூரண ஒத்துழைப்பை கேட்டுக் கொள்கின்றோம் என பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ



# சஜித் அணியினருக்கு அரசுடன் உடன்பாடு - ரவி

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஐக்கிய மக்கள் சக்தியினர் (சஜித் அணி) எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தை தமது பணிகளுக்காக எப்படி பயன்படுத்துகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தைப் பயன்படுத்தும் உரிமை ஐக்கிய மக்கள் சக்தியினருக்குக் கிடையாது எனவும் அரசாங்கத்துடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள உடன்பாட்டின் அடிப்படையிலேயே அவர்களால் அந்த அலுவலகத்தைப் பயன்படுத்த முடிந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்துடன் உடன்பாடுகளை செய்துகொண்டவர்கள் யார்? என்பது எதிர்காலத்தில் தெரியவரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வாழ்வாதாரத்திற்கு வழியேற்படுத்துங்கள்

## அரச அதிபரிடம் ஆனல்ட் அவசர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் தாக்கத்தால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரம் மற்றும் தொழில் நிலை தொடர்பில் யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனல்ட் அவசரக் கோரிக்கை ஒன்றை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் முன்வைத்தார்.

நேற்று முதல்வரால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அக்கடிதத்தில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் நாட்டு மக்களின் பாதுகாப்பு காரணங்களுக்காக ஊரடங்குச் சட்டம் நீண்ட நாட்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றமை யாவரும் அறிந்ததே. ஊரடங்கின் போதும் சரி, ஊரடங்கு தளர்வின் போதும் சரி நடைமுறை வாழ்வியலில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் பல்வேறு தாக்கங்கள் இடம்பெற்றுள்ளதுடன், அவர்களின் வாழ்வாதாரமும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் தொழில் நிலை சார்ந்தோர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதாவது.

1. யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர்கள் வைரஸ் தாக்கம் அடையாளம் காணப்பட்ட நாட்களிலிருந்து எமது கோரிக்கைக்கு அமைவாக தமது அழககங்களை மூடியதுடன், தற்பொழுதும் நாடு தழுவிய ரீதியிலான அறிவுறுத்தலுக்கமைவாகவும் தொடர்ச்சியாக தமது ஒப்பனை நிலையங்களை மூடி இவ்வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு தமது ஒத்துழைப்புக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் 750 இற்கும் மேற்பட்ட நாளாந்த தினக்கூலித் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன், அவர்களின் வாழ்வாதாரமும் மிகவும் பாதிப்படைந்திருக்கின்றது.

2. கடல் தொழிலுக்கான அனுமதிகள் ஊரடங்கு காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்தாலும், ஆழ்கடல் மீன்பிடிகளுக்கான அனுமதிகள் வழங்கப்படாமையால் அத்தொழிலில் ஈடுபட்டு வந்த சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தினக் கூலித் தொழில் மேற்கொள்ளும் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

3. கடல் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதிகள் வழங்கப்பட்ட போதிலும் ஒரு படகில் இருவர் மாத்திரமே தொழிலில் ஈடுபட முடியும் என்று மட்டுப் படுத்தப்பட்டமையால் கடற்றொழிலாளர்கள் அதிர்ச்சியில் உள்ளதுடன், மீன்பிடியிலும் ஈடுபட முடியாதுள்ளனர். எனவே ஒரு படகிற்கான தொழிலாளர்களின் எண்ணிக்கையை மூன்றாகவோ அல்லது நான்காகவோ அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

4. எவ்வித தொழில் நடவடிக்கைகளும் இன்றி தற்பொழுது சிரமங்களை எதிர்நோக்கிவரும் குடிசைக் கைத்தொழிலில் ஈடுபடும் பெண்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் ஆட்டோ சாரதிகள், வாழ்வாதார நிலைமைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது.

5. இடர்காலத்தில் சகலரும் நன்மையடையக் கூடிய வகையில் அத்தியாவசிய பொருட்கள் அனைவருக்கும் நியாய விலையில் கிடைப்பதை உறுதி செய்தல்.

எனவே மேற்படி நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மேற்குறித்த தொழில்சார் குடும்பங்களுக்கு ஊரடங்கு உத்தரவுகள் நீடிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட செயலகத்தின் ஊடாக விசேட பொறிமுறை ஒன்றின் ஊடாக வாழ்வாதாரத் திட்டங்களை வழங்குவது தொடர்பில் சாதகமாக பரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-7)

# ஆனையிறவு சோதனைச் சாவடியில் மிகவும் இறுக்கமான நடவடிக்கை

## மகிந்தவிடம் மூன்று விடயங்களை முன்வைத்த சிறீதரன்



(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பு பிரதமர் மகிந்த தலைமையில் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம் பெற்றது.

இதன்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மூன்று முக்கிய விடயங்களை முன்வைத்தார்.

● ஆனையிறவு சோதனைச் சாவடியில் மிகவும் இறுக்கமான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. குறிப்பாக நேற்று முன்தினம் யாழிலிருந்து கொழும்புக்கு வருகை தந்த போது வவுனியா வரை மிகவும் இறுக்கமான நடைமுறையை இராணுவத்தினர் முன்னெடுக்கின்றனர்.

ஆனால் வவுனியாவைத் தாண்டிய பின் எந்த இறுக்கமான நடைமுறையையும் காணவில்லை. ஆனையிறவு சோதனை சாவடியில் என்னைக்கூட மூன்று தடவைகள் திருப்பியனுப்பினர்.

நாட்டில் எந்தச் சோதனைச் சாவடியிலும் இல்லாத மிகவும் நெருக்கமான சோதனை நடைபெறுவதற்கான காரணம் இது வரை யாருக்கும் தெரியவில்லை.

● அரசால் வழங்கப்படுகின்ற 5 ஆயிரம் ரூபாய் நிவாரணம் போதாது. நாளாந்த தினக் கூலிக்கு செல்பவர்கள் ஆட்டோ சாரதிகளாக இருந்து நாளாந்த உழைப்புக்குச் செல்பவர்கள் புகைப்படப் பிடிப்பாளர்கள், சிகை அலங்கரிப்பாளர்கள், உள்ளூர் நன்னீர் மீன் பிடியாளர்கள் என அனைவருக்கும் நாளாந்த வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனை விட பல்வேறு நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசால் வழங்கப்படும் நிவாரண உதவி போதாது. இதனை அதிகரிக்க வேண்டும் குறைந்தது மாதம் ஒன்றிற்கு பத்தாயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். வழங்கினால் மட்டுமே நிம்மதியாக அவர்கள் வாழ்க்கையை கொண்டு நடத்த முடியும்.

● பாடசாலைகளை கொரோனா தனிமைப்படுத்தல் முகாம்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதையிட்டு மக்கள் மத்தியில் அச்ச நிலைமை தோன்றியுள்ளது.

எனவே பாடசாலைகள் மற்றும் கல்வி நிலையங்களை தனிமைப்படுத்தல் முகாம்களாக மாற்ற வேண்டாம். அதற்கான பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்யுங்கள் போன்ற மூன்று விடயங்களை முன்வைத்தார். (இ-7)

# வீடு கையளிக்கும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/263 கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவருக்கு நுகேகொட பகுதியைச் சேர்ந்த துஷாரா தேனுவரவின் நிதிப் பங்களிப்புடன் இராணுவத்தினரால் வீடு கட்டிக் கொடுக்கப்பட்ட இவ் வீட்டை யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லான் வணிக சூரிய நேற்று கையளித்தார். (ஜ-101)

# பல்கலைக்கழகங்களை மீளத்திறப்பது ஒத்திவைப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் கற்கை நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த நாட்டில் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகளையடுத்து பல்கலைக்கழக நடவடிக்கைகள் யாவும் கடந்த மார்ச் 13 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டன.

இந்நிலையில் பல்கலைக் கழகங்களின் கற்கை நடவடிக்கைகள் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்னர் அறிவித்திருந்தது.

எனினும் சுகாதாரத் துறையினரின் ஆலோசனையின்படி பாதுகாப்பான சூழல் ஏற்படும் வரை பல்கலைக்கழகங்களை மீண்டும் திறக்க முடியாது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்றுத் தெரிவித்தது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 158cm
தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. பல்பொருள் வாணிபம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10701

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: 39 செவ் 12 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BBA, CIMA. AIB, Manager
எதிர்பார்ப்பு: பட்டதாரி பெண்
தொ.இ: B/10703

பிறப்பு: 983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Charted Accounting, UK இல் கடை
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10706

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்- மகம் 1
கி.பா: - செவ் 2 இல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்: B.Sc,MBA,Banker
எதிர்பார்ப்பு: படித்த பெண், வெளிநாடு விரும்பத்தக்கது.
தொ.இ: B/10707

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: 38 செவ் 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.Sc பட்டதாரி
எதிர்பார்ப்பு: பொருத்தமான உயர் உத்தியோகம் பார்க்கும் மணமகன்.
தொ.இ: G/10702


பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பூரம் 4
கி.பா: 24 செவ் 8 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: Civil Engineering, Development Officer
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/10704

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா:- சூரி செவ் 7இல்
உயரம்: 5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.
எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்
தொ.இ: G/10705

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ரேவதி 1
கி.பா: 49 செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: B.Sc, பதிவாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகன்
தொ.இ: G/10712

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# இலங்கையில் கொரோனாவால் இறந்தவரின் ஊரில் தங்க நிறத்தில் விசித்திர வௌவால்



(பொல்பித்திகம)

பொல்பித்திகம பிரதேசத்தில் தங்க நிறத்திலான விசித்திர வௌவால் ஒன்று அவ தானிக்கப்பட்டுள்ளது.

வண்ணாத்துப்பூச்சியைப் போன்று அளவில் சிறிய விசேட வகை வௌவால் ஒன்றே இவ்வாறு அவதானிக்கப்பட்டது.

பொல்பித்திகம பிரதேசத்தில் வீடு ஒன்றில் இந்த வௌவால் அவதானிக்கப்பட்டது. நேற்று முன்தினம் வீட்டிலுள்ள சிலந்தி வலை ஒன்றில் இந்த வௌவால் சிக்கியிருந்ததாகவும் அதனை பாதுகாப்பாக மீட்டு, பறக்க விட்டதாகவும் அந்த வீட்டார் தெரிவித்தனர்.

இலங்கையில் நேற்று முன்தினம் கொரோனாவால் உயிரிழந்த பெண்ணும் இதே பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 3 நாட்களுக்கு இறைச்சி, மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்படும்

(கொழும்பு)

இன்று முதல் மூன்று தினங்களுக்கு அனைத்து இறைச்சி விற்பனை நிலையங்கள், மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்படவுள்ளன.

இது தொடர்பில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கை பின்வருமாறு.

2020 வெசாக் பண்டிகையை முன்னிட்டு மதுபானசாலைகள் , இறைச்சி விற்பனை நிலையங்கள், இறைச்சிக்காக விலங்குகளை உயிரிழக்கச் செய்யும் நிலையங்கள், சூதாட்ட நிலையங்கள் (ரேஸ்புக்கி), கஷினோ நிலையங்கள், கிளப்புக்கள் ஆகியவற்றை மூடுதல்.

2564 ஸ்ரீ பௌத்த வருட மான 2020 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி மற்றும் 8 ஆம் திகதி ஆகிய இரண்டு தினங்கள் வெசாக் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், இம்முறை வெசாக் வைபவத்தை முன்னிட்டு 2020 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதி வெசாக் வாரமாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதேபோன்று நீரோகிமை பரமஸுகாய் சதுட்ட பரமதனய் என்ற தொனிப் பொருளின் கீழ் அரசாங்கம் வெசாக்கை பிரகடனப்படுத்தியது.

இதனால் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 6, 7 மற்றும் 8 ஆகிய 3 தினங்களில் நாடு முழுவதி லுமுள்ள அனைத்து இறைச்சி விற்பனை நிலையங்களை மூடுவதற்கும், சிறப்பங்காடி நிலையங்களில் (சுப்பர் மார்க்கெட்) மதுபான விற்பனையை நிறுத்துவதற்கும் , விலங்குகளை உயிரிழக்கச் செய்யும் நிலையங்கள், சூதாட்ட நிலையங்கள் (ரேஸ்புக்கி) கஷினோ நிலையங்கள் மற்றும் கிளப்புக்களை மூடுவதற்கும் இறைச்சி விற்பனை நிலையங்களை மூடுவதற்கும் சிறப்பங்காடி நிலையங்களில் (சுப்பர் மார்க்கெட்) இறைச்சி விற்பனையை நிறுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் அறிவிக்கின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஊரடங்குச் சட்டம் தர்மத்தின் அடிப்படையிலான வாழ்வுக்குத் தடையாக அமையமாட்டாது

## வெசாக் தினச் செய்தியில் பிரதமர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கையைப் போன்றே முழு உலகும் கொரோனா தொற்று நோயின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ள நிலையிலேயே இம்முறை புத்தபெருமானின் பிறப்பு, புத்தர் நிலை, பரிநிர்வாணம் இடம்பெற்ற வெசாக் பண்டிகையைக் கொண்டாட வேண்டியேற்பட்டுள்ளது.

கடுமையான அர்ப்பணிப்பு, பொறுமை மற்றும் பௌத்தருக்கே உரித்தான மன அமைதியுடன் செயற்பட்டமையினால் இலங்கை வாழ் மக்களை அந்தத் தொற்றுநோயிலிருந்து வெற்றிகரமாக மீட்டெடுப்பதற்கான நேரம் மிகவும் அண்மித்துள்ளது.

எனவே, நாம் தொற்றுநோயிலிருந்து மீட்டெடுப்பதற்காக மேற்கொண்ட போராட்டத்தின் வெற்றி பாதுகாக்கப்படும் வகையிலேயே வெசாக் பண்டிகையைக் கொண்டாட வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.


ஊரடங்குச் சட்டம் அல்லது சுகாதார ரீதியான சட்டதிட்டங்கள் தர்மத்தின் அடிப்படையிலான வாழ்வுக்குத் தடையாக அமையமாட்டாது என்பதே எனது புரிதலாகும். இரண்டாயிரம் வருடங்களாக தர்மத்தின் அடிப்படையில் வாழ்வினைக் கழித்த பௌத்தர்களுக்கு வீட்டிலிருந்தவாறே பொருள் சார்ந்த மற்றும் கொள்கைப் பூஜைகளில் ஈடுபடுவதற்கான ஒழுக்கப்பயிற்சி காணப்படுகிறது. வெசாக் தினத்தில் விளக்கேற்றி, அலங்காரங்களைச் செய்து உள மகிழ்ச்சியை ஏற்படுத்திக்கொள்வது பௌத்தரின் பழக்கமாகும். தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தீமைகளிலிருந்து நீங்குவதற்கும் நன்மைகளை அதிகரித்துக் கொள்வதற்கும் எவ்விதத்திலும் தடையாக அமைவதில்லை.

இந்த அனர்த்தத்தின் போது புத்தபெருமான் காட்டிய வழியே எமக்குப் பாதுகாப்பாக உள்ளது. வாழ்க்கை நிலையற்றது எனவும் நிலையான எதுவுமில்லை எனவும் போதிக்கும் புத்த போதனையின் உண்மைத் தன்மையினை இந்த அனர்த்த நிலைமையில் முழு உலகும் புரிந்து கொண்டுள்ளதாகவே தெரிகிறது. உள்ளம், உடம்பு, வார்த்தைகள் ஆகிய மூன்று வாயில்களையும் கட்டுப்படுத்திக் கொள்ளுமாறு கூறும் புத்த போதனை இவ்வாறான அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான சிறந்த வழிமுறையாகும்.

ஏனைய நாடுகளுக்கு முன்னரே கொவிட் தொற்றினை வெற்றி கொள்வதற்கு பௌத்தர்கள் பழகிய, பயிற்சி பெற்ற அந்த பணிவொழுக்கமே காரணமாக அமைந்தது என நம்புகிறேன்.

எனவே வெசாக் காலத்தில் உள்ளம், உடம்பு, வார்த்தைகள் ஆகிய மூன்று வாயில்களையும் ஒழுக்கத்துடன் பேணி, மன அமைதியுடன் வாழ்வினை நோக்கி, மூவுலகிற்கும் கருணை காட்டி, நாம் மும்மணிகளினதும் ஆசியை வேண்டி நிற்போம். அனைத்து உயிர்களும் துன்பங்களின்றி, நோய்நொடிகளின்றி வாழப் பிரார்த்திப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உயிர் காக்கப் போராடிவரும் சுகாதாரத்துறையினருக்காக பிரார்த்தனையும் வழிபாடும்



(யாழ்ப்பாணம்)

கொரோனா நோயைக் கட்டுப்படுத்துவதற்காக தம் உயிரைப் பணயம் வைத்து எம் உயிர் காக்கப் போராடி வரும் வைத்திய சமூகம், சுகாதாரத் துறையினர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கும் முகமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் வரிசையாக விளக்கேற்றியும் மெழுகுவர்த்திகள் ஏற்றியும் பிரார்த்தனை செய்யப்பட்டது.

சிவன் அறக்கட்டளை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மேற்படி நிலையத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம், தொழிலதிபர் அ.கிருபாகரன், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக் கிளை உறுப்பினர் வைத்திய கலாநிதி டாக்டர் ஜெனார்த்தனன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சம நேரத்தில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, மந்திகை வைத்தியசாலை மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு பொது வைத்தியசாலைகளுக்கு முன்பாகவும் தீபங்களேற்றியும் மெழுகுவர்த்திகள் ஏற்றியும் பிரார்த்தனை செய்யப்பட்டன.

இதேவேளை, நேற்றுக்காலை வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், யாழ்.நாகவிகாரை மற்றும் யாழ்.அடைக்கல அன்னை ஆலயம், யாழ். ஐந்து சந்திக்கு அருகிலுள்ள பள்ளிவாசல் ஆகிய சர்வமத வழிபாட்டுத் தலங்களில் சர்வமத ஆராதனை வழிபாடுகளும் இடம்பெற்றன. (இ-18)

# fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2031 facebook

### நவீன்குமார்




### பால்ராஜ்




### ரேதிகா




### ராஜேஷ்




### பாரிஜாதம்




### பரமு




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழினப்படுகொலைகளின் 11ஆம் ஆண்டு நினைவேந்தல்

# எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நடைபெறும்

(முல்லைத்தீவு)

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு எளிமையான முறையில், கொரோனா பரவல் கட்டுப்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெறும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.**

இது குறித்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு விடுத்துள்ள அறிவிப்பு அறிக்கையில், முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலைகளின் 11 ஆம் ஆண்டு நினைவேந்தல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி அன்று நடைபெறும்.

கொவிட் 19 பரவல் காரணமாக தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள கட்டுப்பாட்டு நடைமுறைகள், சட்டங்கள் என்பவற்றிற்கு மதிப்பளித்து அவற்றைக் கடைப்பிடித்தபடி இந்நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படும் உள்ளூர்வளங்களை ஒன்று திரட்டிப் பயன்படுத்துவதன் மூலம் இந்நினைவேந்தல் எளிமையாகவும் உரிய முறைப்படியும் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழு நிதி திரட்டல் நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாது. இந்நினைவேந்தல் நடவடிக்கைகள் தொடர்பில் அனைத்துப் பொது அமைப்புக்கள், பொது மக்கள் அனைவரையும் இந்

## ஏற்பாட்டுக்குழு அறிவிப்பு

நினைவேந்தலுக்காய் எம்முடன் இணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்வதுடன் நினைவேந்தல் தொடர்பான நிகழ்ச்சி ஒழுங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும் எனவும் மேலதிக விபரங்களுக்கு, தென்கையிலை ஆதீனம் திருகோணமலை 077 509 8157, அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங் 077 618 1008 என்பவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.(9)

## தேர்தல் கால போலிப் பிரசாரத்துக்காகவே கூட்டமைப்பினர் நாடகம் போடுகின்றனர்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

அரசியல் வெறுமையில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ளவே கூட்டமைப்பினர் நாடகம் போடுகின்றனர் என தமிழர் தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.



வவுனியாவில் 1173 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தமைக்கு எதிர்ப்பை வெளியிட்டு நேற்று வவுனியாவில் பதாகைகளை தாங்கியிருந்ததுடன் ஊடக சந்திப்பையும் நடத்தியிருந்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை தமித்தேசியக்கூட்டமைப்பினர் சந்தித்திருந்தனர். ஆனால் நாங்கள் இந்த போராட்டத்தினை ஆரம்பித்த காலத்திலும் இவ்வாறான போராட்டம் வடக்கு-கிழக்கில் ஆரம்பித்த போதும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் ரணில் அரசாங்கத்துடன் முண்டு கொடுத்துக்கொண்டிருந்த போது மகிந்த ஆட்சிக்கு வந்து விடுவார் என மக்களுக்கு அச்சமூட்டிக்கொண்டிருந்தனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அதனையே கூறியிருந்தனர்.

சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் தமது நண்பரான ரணில் விக்கிரமசிங்க காலத்தில் பாடிய பாடலையே கோத்தபாய ராஜபக்ஷ காலத்திலும் மகிந்த முன்னிலையில் பாடியுள்ளனர். அந்த பாடலின் பொருளானது உள்நாட்டு விசாரணையும் அடுத்த பாராளுமன்ற தேர்தலில் தங்களுக்கான மூலப்பொருளை பெற்றுக்கொள்வதற்காகவுமே இருக்கின்றது. இது தந்தை செல்வாவின் அரசியல் அல்ல.

தமிழ் மக்களின் முக்கிய நாளில் மீண்டும் தமிழ் மக்களின் காதுகளில் கடவுள்தான் தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்ற வாசகமே ஒலிக்கின்றது. அது மாத்திரமின்றி மகிந்த ராஜபக்ஷவிடம் கூட்டமைப்பினர் ஒரு கோவையை கொடுத்துள்ளனர். அது என்னவென்று தெரியாது. கடந்த ஆட்சிக்காலத்தில் நிறைவேற்ற வேண்டிய, நிறைவேற்றக்கூடியதாக இருந்த விடயங்களை இந்த ஆட்சிக்காலத்தில் கொடுத்துள்ளமை நகைப்புக்குரியதே.

அவர்களுக்கு அரசியல் வெறுமையொன்று தற்போது ஏற்பட்டுள்ளது. அந்த வெறுமையில் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ளவும் தமது பதவிகளை பெற்றுக்கொள்வதற்காகவும் தேர்தல் கால போலிப்பிரசாரத்திற்காகவுமே காணி பிடிப்பு, அரசியல் கைதிகள் விடயங்களை மீண்டும் கூட்டமைப்பினர் கையில் எடுத்துள்ளனர் என தெரிவித்தனர். (9-250)




## அனுமதியுடன் மாடு வெட்டியதற்கு தடை விதித்த இராணுவத்தினர்

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவில் உரிய அனுமதி பெற்று மக்களுக்கு இறைச்சி வழங்குவதற்காக மாடுகள் வெட்டுவதற்கு ஆயத்தமாகிய நிலையில் அதை இராணுவத்தினர் தடை செய்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு நீராவிப்பிட்டி பகுதியிலுள்ள முஸ்லிம் மக்கள் அவர்களுடைய நோன்புக் காலத்தை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை 9 மாடுகளை வெட்டுவதற்காக பிரதேச சபையிடம் அனுமதி பெற்றுள்ளனர்.

அந்த வகையில் முள்ளியவளை பகுதியில் அமைந்துள்ள கொல்களத்தில் மாடுகள் வெட்டிய போது அங்கு வந்த இராணுவத்தினர் அதை இடைநிறுத்தி உள்ளனர். ஏராளமான வாகனங்களில் குறித்த இடத்துக்கு வருகை தந்த இராணுவத்தினர் மாடுகளை வெட்டுவதை தடை செய்யுமாறும் இறைச்சிகளை வெளியில் எடுத்துச் செல்வதற்கு தடை விதித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் குறித்த மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், தங்களுடைய நோன்புக் காலத்தில் வசதி படைத்தவர்கள் ஏழை மக்களுக்கு இவ்வாறாக இறைச்சிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை தானம் செய்வது வழமை எனவும் இவ்வாறான நிகழ்வுகள் செய்த போது இராணுவத்தினர் தலையிட்டு உரிய சட்டபூர்வமான அனைத்து ஏற்பாடுகளும் இருந்தபோதும் இந்த செயற்பாடுகளை நிறுத்தியது இங்கு இராணுவ ஆட்சியா இடம்பெறுகிறது என எண்ணத் தோன்றுவதாக தெரிவித்தனர்.

குறிப்பாக இந்த ஆட்சி மாற்றத்தின் பின்னர் பொதுமக்களுடைய பல்வேறு விடயங்களிலும் இராணுவத் தலையீடுகள் அதிகரித்து வருவதாகவும் நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தை தொடர்ந்து அதனை கட்டுப்படுத்த ஆரம்பித்த காலப்பகுதி முதல் மிகவும் தீவிரமாக பொது மக்களுடைய சிவில் செயற்பாடுகளில் இராணுவத்தின் தலையீடுகள் அதிகரித்து வருகின்றன என தெரிவித்தனர். (9-281)

## அப்பிள் செய்கையில் வெற்றி கண்ட விவசாயி





(முறிகண்டி)

கிளிநொச்சி பச்சிளைப்பள்ளி பிரதேசத்தில் அமரசிங்கம் என்ற விவசாயி அப்பிள் செய்கையில் வெற்றியைக் கண்டுள்ளார்.

லண்டனிலிருந்து சிறு கன்றினை எடுத்து வந்து கடந்த 4 வருடங்களிற்கு முன்னர் தனது தோட்டத்தில் நாட்டிய அவர் சாதாரண தாவரங்கள் போலவே பராமரித்து வந்துள்ளார். குறித்த அப்பிள் மரம் கடந்த வருடம் காய்த்துள்ளது. அதனை அறுவடை செய்த அவர் தொடர்ந்தும் அதனை பராமரித்து வருகின்றார்.

தற்போது குறித்த மரம் மீண்டும் அறுவடைக்கு தயாராகி வருகின்றது. இறக்குமதி அப்பிள்களின் சுவையைக் கொண்டதாகவும் அதன் அளவில் சிறியதாக காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். எனினும் குறித்த தாவரத்தை முறையான ஆலோசனைகளுடன் பராமரிக்கும் சந்தர்ப்பத்தில் சிறந்த பெறுபேற்றினை காண முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

குறித்த விவசாயி தனது காணியில் திராட்சை, அன்னாசி உள்ளிட்ட குளிர் வலய தாவர உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்றார். எனினும் குறித்த செய்கையில் ஓரளவு வெற்றி கண்டுள்ளதாக தெரிவிக்கும் அவர், அதற்கான ஆலோசனைகளும் உதவிகளும் கிடைக்கும் பட்சத்தில் செய்கையில் மேலும் முன்னேற்றத்தை காண முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் முதல் முதலாக அப்பிள் பயிரிடப்பட்டது. நுவரெலியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அப்பிள் செய்கை பின்னர் கைவிடப்பட்டது. எனினும் சில பகுதிகளில் வீட்டுத்தோட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-100)

## மன்னாரில் 100 ஏக்கரில் சுண்டங்காய் செய்கை ஏற்றுமதியின்றி தவிக்கும் விவசாயிகள்



(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சில கிராமங்களில் பெருமளவான தோட்டச் செய்கைகள் இடம் பெற்று வருகின்றன.

குறித்த தோட்டச் செய்கையுடன் "சுண்டங்காய்" (திப்பட்டு) என்று அழைக்கப்படுகின்ற ஒரு மரக்கறிப் பயிர் செய்யப்பட்டு வருகின்றது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சன்னார், ஈச்சளவக்கை,பெரியமடு ஆகிய கிராமங்களில் பல இலட்சம் ரூபாய் முதலிட்டு குறித்த பயிர்ச் செய்கை சுமார் நூறு ஏக்கர் நிலப்பரப்பில் பாரிய அளவில் முன்னெடுக்கப்படுகின்றது.

வட மாகாணத்தை விட அதிகளவில் தென் பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அதிகளவானவர்கள் தமது வாழ்வாதார தொழிலாக குறித்த பயிர்ச் செய்கையினை முன்னெடுத்து வருகின்றனர். சுண்டங்காய் முற்றுவதற்கு முன் அவற்றை ஆய்ந்து சந்தைப்படுத்த வேண்டும். ஆனால் தற்போது காய் முற்றும் நிலையில் காணப்படுகின்றது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அவற்றை ஆய்ந்து ஏற்றுமதி செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இதனால் பல குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ள நிலையில் காணப்படுகின்றனர்.


இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# நோய் அணுகாமல் நலம் காக்கும் சித்த மருத்துவம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்



மிளகு

சுக்கு

திப்பிலி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**மூலிகைகளின் செய்கைகள்**

சுக்கு, மிளகு, திப்பிலி– கார்ப்புச் சுவை, கரோதஸில்உள்ளஆபத்தை போக்கும் (Clear the channels)

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்– கற்ப மூலிகைகள், முத்தோஷங்களையும் தன்னிலைப்படுத்தும்.

விஷ்ணுகிராந்தி, நிலவேம்பு, வெண்கொடி வேலி, கொத்தமல்லி, சீந்தில், பேய்ப்புடோல், பற்படாகம்– சுரம் அடக்கி

வெட்டிவேர்,விலாமிச்சு, சந்தனம்–உள்ளழலாற்றி, குளிர்ச்சி உண்டாக்கி

ஆடாதோடை, துளசி, தூதுவளை, சிற்றரத்தை, கண்டங்கத் தரி– இருமல், சளி, தொண்டைத் தாபிதங்களைப் போக்கும்.

அமுக்கிரா, பறங்கிக் கிழங்கு– உடல் பலமாக்கி

நன்னாரி–சிறுநீர் பெருக்கி, இரத்தத்தைச் சுத்திகரிக்கும், உடல் பலமாக்கி

கீழ்காய்நெல்லி, நன்னாரி, திரிபலா, விஷ்ணுகிராந்தி, தூதுவளை, துளசி, சீந்தில், அமுக்கிரா– கற்பமூலிகைகள்

இக்குடிநீரைப் பருகுவதால் முத்தோஷங்களும் சமநிலையடைந்து உடல்வெப்பத்தைக்குறைத்து நோய் வருவதைத் தடுக்கும். இதனைத் தற்காப்பு முறையில் 14 நாட்கள் பயன்படுத்தலாம்.

சீந்தில், கருந்துளசியை உலர்த்திப் பொடித்து தேநீருக்குப் பதிலாக காலை, மாலை பயன்படுத்த தொண்டை அழற்சி குறையும். இதனை இளஞ்சூட்டில்கொஞ்சம் கொஞ்சமாக பருகவேண்டும்.

அமுக்கிரா வேரை உலர்த்திப் பொடித்து 1–2 கிராம் இரவில் பயன்படுத்தலாம். "கெரோயின் ஹிங் சங்" எனும் மூலிகை சீன மக்களால் தேகபலத்தை அதிகரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டது. அதற்குச் சமனான செய்கை உள்ள "இந்தியன் ஹிங்சங்" எனப்படும் அமுக்கிரா ஆனது உடல் பலத்தையும் தாது பலத்தையும் தற்போது தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளதுடன் வீடுகளில் முடங்கியுள்ளதால் ஏற்படும் மன அழுத்தங்களை குறைப்பதற்குப் பயன்படும்.

தேநீரில் நன்னாரி வேரினை தட்டிச் சேர்ப்பதன் மூலம் உடல் வெப்பத்தைக்குறைப்பதுடன் ,சிறுநீரைபெருக்கி,உடல்பலமாக்கிஉடல் தேற்றி செய்கைகளைக் காட்டுவதுடன் கற்ப மூலிகையாக உள்ளதால் நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும்.



பற்படாகம்

பொதுவாக சித்திரை,வைகாசி காலத்தில் வேப்பம் பூ கிடைக்கிறது.இதனை பச்சடி, வடகமாகவும் செய்து பயன்படுத்தலாம். அத்துடன் 8g வேப்பம் பூவினை இரவில் 200 ml நீரில் ஊறவிட்டு அதிகாலையில் வேப்பம்பூ குளிர்நீர் ஊறல் குடிநீராகப் பயன்படுத்தலாம். வேப்பம் பூவினை வெந்நீரில் ஊறப்போடுவதன்மூலம்அதில் உள்ள சில வேதியல் சத்துக்கள் அழிவடைந்து விடும்.வேப்பம் பூ கபத்தை சமப்படுத்தும், கிருமிகளை அழிக்கும். இரத்தத்தைச் சுத்திகரிக்கும்.

வைகாசி மாதங்களில் இலுப்பைப்பூ கிடைக்கும். அதனை சேகரித்து உலர்த்தி சர்க்கரை சேர்த்து துவைத்து சாப்பிடலாம். இதனால் இரும்புச் சத்துக் கிடைப்பதோடு கபத்தைக் கட்டுப்படுத்தும்.

வைகாசி மாதத்தில் வில்வம் பூ கிடைக்கும். இதனையும் சேகரித்து இரவில் ஊறப்போட்டு காலையில் குடிக்கலாம்.



கோரைக்கிழங்கு

இவற்றை சம அளவு கலந்து பசுவின் பால்விட்டரைத்து சிறிது சூடு செய்து இளம் சூட்டுடன் உச்சியிலும் உடலிலும் பூசி சிறிது ஊற விட்டு குளித்து வரலாம்.

தினமும் பயன்படுத்தக் கூடிய மூலிகைக் குளியல் பொடியாக பாசிப்பயறு,அகில் கட்டை, சந்தனம், தேவதாரு, வெட்டிவேர், புனலை விதை (soap nut tree) சிகைக்காய், துளசியிலை, திருநீற்றுப் பச்சிலை இவற்றை அல்லது இவற்றில் சிலவற்றை பொடித்து உடலில் தேய்த்து குளிக்கப் பயன்படுத்தலாம்.

தினமும் மூலிகைப் பொடியால் குளிப்பதால் தோலை பாது காப்பதோடு இரத்த ஓட்டமும், நிணநீர் ஓட்டமும் சீராவதால் நோய் எதிர்ப்பாற்றல் மேம்படும்.

**எண்ணெய்க் குளியல்**

பொதுவாக நல்லெண் ணெய் தேய்த்துக் குளிப்பது நன்று. வெயில் காலத்தில் உடற்சூடு கூடியிருக்கும் போது இந்த எண் ணெய் சிறந்த பலனைக் கொடுக்கும்.

எண்ணெயிட்டு குளிக்கும் போது உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை எல்லா இடங்களிலும் எண்ணெய் முழுமையாக பரவியிருக்க வேண்டும். உடலின் ஒன்பது துளைகளிலும் எண்ணெய் விடல் வேண்டும். தலை, கால், பாதம், உள்ளங்கை ஆகிய இடங்களில் எண்ணெயினை மிகுதியாக பயன்படுத்த வேண்டும். உடலில் தேய்க்கும் போது சூடு ஏற்படக் கூடாது. உடலில் மிருதுவான அழுத்தம் கொடுத்தும் விரல் நுனிகளால் தேய்க்க வேண்டும். எண்ணெய்விட்டுத் தேய்த்தபின்பு குறைந்தது 40 நிமிடங்களாவது ஊற விடல் வேண்டும். எண்ணெயிட்டுக் குளிப்பதற்கு வெந்நீரையே பயன்படுத்தல்வேண்டும்.

❖ நெல்லிக்காய்ச்சாறு, வெந்தயச்சாறு, குரக்கன் கூழ் பயன்படுத்தலாம்.

❖ இஞ்சி, வெங்காயம் இரண்டையும் சமஅளவு சேர்த்து அரைத்து தேன், வெந்நீர் கலந்தும் பருகலாம். நோய் எதிர்ப்பாற்றலை மேம்படுத்தும். தொடர் தும்பல், மூச்சுப்பாதை கோளாறுகள் ஏற்படாமல் பாதுகாக்கும்.

❖ தேனும் வெந்நீரும் மட்டுமோ, எலுமிச்சைச் சாறு வெந்நீர் மட்டுமோ கலந்து பருகலாம். இவை உடலிற்கு ஊட்டமளிக்கக் கூடியது. சீரண மண்டலத்தை சீர்படுத்தும்.

❖ இளவேனிற்கால பழஞ் சோற்றுநீர்.



**ஆற்றுநீர் வாதம் போக்கும்**
**அருவிநீர் பித்தம் போக்கும்**
**சோற்றுநீர் மூன்றையும் போக்கும்.**

அன்று சமைத்த அரிசிச் சோற்றில் நீர் ஊற்றி வைக்க வேண்டும். மறுநாட்காலை வெங்காயம் தேவைப்படின் மோர் கலந்து பருகலாம். இதில் அமினோ அமிலங்களும் நன்மை உண்டாக்கும் பூஞ்சைகளும் (Yeast) மிகுதியாகக் கலந்துள்ளன. நோய் எதிர்ப்பாற்றல் போன்றவற்றிற்கு இவை காரணமாகின்றன. பழஞ்சோற்றுநீர் வயிறு, குடல் பாதைகளை சீர் செய்து உடலிற்கு மிகுந்த பலனைக்கொடுக்கின்றது.

மலச்சிக்கல் உள்ளவர்கள் 500 மில்லியிலிருந்து 1000 மில்லி வரை பழஞ்சோற்றுநீரை அருந்தி சிறிது நடைப்பயிற்சியை மேற்கொள்ள சிறந்த பலனைக் கொடுக்கும்.

சுற்றாடலில் உள்ள தொற்றுக்களை நீக்க வசம்பு நீர் அல்லது வசம்பு எண்ணெயை தெளிக்கலாம். பச்சை வசம்பை கையில் கட்டவோ உள்ளுக்கு எடுக்கவோ கூடாது. இதில் நமைச்சலை உண்டாக்கும் வேதியற்பொருள் உண்டு. வசம்பை உள்ளுக்கு எடுக்கும் போது சுட்டு கரியாக்கி தோல் சுரண்டிய பின்பு தான் பயன்படுத்த வேண்டும். வசம்பிற்கு கிருமி கொல்லி (Disinfectant) செய்கை உண்டு.

புகைப்போடல்கஞ்சாங் கோரை, வேப்பம் வித்து,வேப்பிலை இவற்றைப் பயன்படுத்தி வீட்டினுள்ளும் வீட்டின் புறப்பகுதியிலும் புகைபடும்படி பயன்படுத்தவேண்டும்.

100 வயதுடைய (வயது முதிர்ந்த) வேம்பின் பட்டை, வேப்பங் கூழ், பழம், வேப்பம் பூ இவற்றை உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக்கொண்டு தினமும் 1 கிராம் அளவு சாப்பிட்டு வந்தாலும் நோய் அணுகாது. 40 நாட்கள் இதனை தொடர்ச்சியாக பயன்படுத்தலாம்.

இளவேனிற்காலத்தில் பதனீர், நுங்கு இளநீர் (பச்சை மட்டை இளநீர்), கரும்புச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தைப்பழச் சாறுகளை கூடுதலாக பயன்படுத்த வேண்டும்.

(முற்றும்)

# தாக்குதல் சந்தேக நபருக்கு சொந்தமான அலுவலகத்திலிருந்து ஆவணங்கள் மீட்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்குச் சொந்தமான அலுவலகத்திலிருந்து பல்வேறு ஆவணங்கள் மீட்கப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

புத்தளம் முந்தல், மதுரங்குளியில் நடத்திச் செல்லப்பட்ட குறித்த பயிற்சி நிலையம், தற்போது பொலிஸ் பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதல்தாரிகளுடன் பயிற்சி நிலையமொன்றை நடத்திச் சென்ற சந்தேகநபர் ஒருவர் கற்பிட்டி பகுதியில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கடந்த 3ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

தாக்குதல்தாரிகளின் கருத்துக்களைப் பிரசாரம் செய்யும் நோக்கில் குறித்த நபர் பயிற்சி நிலையத்தை நடத்திச் சென்றமை, கைது செய்யப்பட்டவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது தெரியவந்தது. சந்தேகநபர் தொடர்பாக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இதுதொடர்பாக அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு சொந்தமான அலுவலகத்திலிருந்து பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

கொழும்பு 15, மட்டக்குளியில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றின் இரண்டாம் மாடியிலுள்ள குறித்த அலுவலகம் நேற்று முன்தினம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது, சந்தேக நபர் நடத்தி வந்த அரச சார்பற்ற நிறுவனம் குறித்த விபரங்கள், குறித்த அமைப்புக்கு நிதி வழங்கியவர்களின் தகவல்கள் என்பன கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, குறித்த அலுவலகம் சீல் வைக்கப்பட்டு, பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டதாகவும், குறித்த அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், பற்றுச் சீட்டுக்கள், புத்தகங்கள், சஞ்சிகைகளை சிறப்புக் குழு ஆய்வு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொரோனாவை ஒழிக்க ஒத்துழைப்பு இல்லை எதிர்க்கட்சியினர் மீது ரோஹித புகார்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் ஒழிப்புக்கு எதிராக அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது என்பதை ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியினர் வெளிப்படுத்தியுள்ளனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் கருத்துக்கள் வெறுக்கத்தக்கவை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு



உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் கொரோனா வைரஸ் ஒழிப்புக்கு எதிராக முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் அவரவர் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் முக்கிய பேச்சுவார்த்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த முக்கிய கூட்டத்தில் கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய கட்சியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விதமாகவே இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இதில் ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சியினர் கலந்து கொள்ளவில்லை. இதன்மூலம் கொரோனா வைரஸ் ஒழிப்புக்கு எதிராக அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் நோக்கம் இல்லை என்பதை இவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# காலியில் 8 கடைகள் தீக்கிரை

(காலி)

காலிநகரிலுள்ள கடைத்தொகுதி ஒன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவு தீவிபத்து ஏற்பட்டதையடுத்து, 8 கடைகள் தீக்கிரையாகின.

காலி பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து, பொலிஸாரும், காலி நகர சபை தீயணைப்புப் பிரிவினரும் இணைந்து தீயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(இ-7)

# இலங்கைக்கு அவுஸ்திரேலியாவால் 1.5 மில்லியன் டொலர் நிதி நன்கொடை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இலங்கைக்கு அவுஸ்திரேலியா 1.5 மில்லியன் டொலர் நிதியை நன்கொடையாக வழங்கியது.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இலங்கைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் பிற உதவிகளை வழங்கியதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய தேசிய ஆய்வகங்கள் மற்றும் நோயாளிகளை நிர்வகிக்கக் கூடிய முறையை வலுப்படுத்துவதற்கான மருத்துவ உபகரணங்கள், சுகாதாரப் பணியாளர்களுக்கான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், தரவுகளைச் சேகரிக்கக்கூடிய தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், நாட்டில் முடக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் பெண்கள் மற்றும் ஏனைய குடும்பங்களுடைய சுகாதாரத்தை உறுதி செய்வதற்கான சுகாதார உபகரணங்களையும் அவுஸ்திரேலியா வழங்கியது.

மேலும் மட்டக்களப்பில் வாழும் சுமார் மூவாயிரம் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கவும் அவுஸ்திரேலிய அரசாங்கம் முன்வந்துள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இருட்டு

"இருட்டைக்கண்டால் பயமுண்டாகின்றதே அது ஏன்?" இப்படி ஒரு கேள்வியை ஒரு பெரியவர் (ஓசோ) விடம் கேட்டார்கள். அதற்கு அவர் பதில் சொல்கின்றார்.

மனிதனுடைய ஆதி கால வாழ்க்கையிலும் தொற்றிக் கொண்ட பயம் இது... வேரூன்றி இருக்கின்றது... இன்னமும் போகவில்லை! ஐம்பதாயிரம் வருடங்களுக்கு முன்னாடி மனிதன் குகைகளிலே வாழ்ந்தான் பகலிலே பயமிருக்காது. இரவில் மிருகங்கள் தாக்கும் , கொல்லும் நிம்மதியாகத் தூங்கக் கூட முடியாது. அதனாலே அந்த மனிதனுக்கு இரவென்றால் மரணம், பயம் என்று பழகிப் போய்விட்டது.

மனிதர்களுடைய எல்லா மனதையும் சேர்த்து மொத்தமாக ஒரு மனம் உண்டு... மனிதர்களுடைய நினைவு மொத்த மனதிலே பதிந்திருக்கின்றது. பரவுது! இந்த மொத்த மனதிலே இருட்டு பற்றிய பயம் பதிந்து நீடிக்கின்றது என்கிறார் அவர். இந்தக் காலத்திலே இரவைப் பகலாக்க எவ்வளவோ விளக்கை ளெல்லாம் வந்தாகிவிட்டது. இரவிலே மிருகங்கள் வந்து தாக்கும் என்ற நிலைமை இல்லை. பாதுகாப்பான வீடுகள் விலங்குகளும் விலகிப் போய்விட்டது. இருந்தாலும் அந்தப் பழங்காலப் பயம் இருட்டு பயம்... இன்னும் மனிதனை விட்டுப் போகவில்லை. இன்னொரு விடயம்.

இருட்டிலே இருந்து வெளிச்சத்துக்கு வராத மனிதர்களும் இன்றைக்கு அதிகம் ஒரு ஆள் ஆற்றிலே மீன் பிடிப்பதற்குப் போனான். இன்னும் விடியவில்லை. அதற்குள்ளேயே வலையை எடுத்துக் கொண்டு கிளம்பிப் போய்விட்டான். வெளிச்சம் வருவதற்கு முன்னாடியே போய்ச் சேர்ந்து விட்டான். விடியும் வரைக்கும் என்ன செய்வது? சும்மா கரையிலே உட்கார்ந்து காலை ஆட்டிக் கொண்டிருந்தான். காலிலே ஏதோ ஒரு சின்ன மூட்டை தட்டுப்பட்டது.

இருட்டிலே அது என்ன என்று சரியாகத் தெரியவில்லை. மூட்டைக்குள்ளே சின்னச் சின்னக் கல்லாக நிறைந்திருந்தது. சும்மா பொழுது போக வேண்டுமே என்பதற்காக இவன் அந்த மூட்டைக்குள்ளே இருந்து ஒவ்வொரு கல்லாக எடுத்து ஆற்றிலே வீசிக்கொண்டிருந்தான். விடியும் வரைக்கும் வேறு வேலை இல்லை என்பதனாலேயே இப்படி செய்து கொண்டு உட்கார்ந்திருந்தான். கிழக்கே மெதுவாக வெளிச்சம் தெரிய ஆரம்பித்தது. இப்பொழுது விடிவதற்கான அறிகுறி.

இதுக்குள்ளே அந்த மூட்டையில் இருந்த எல்லாக் கல்லையும் வீசி எறிந்துவிட்டான். கடைசியாக ஒரே ஒரு கல் மட்டும் தான் கையிலே பாக்கி இருந்தது. வெளிச்சம் வந்ததும் அந்தக் கல்லைப்பார்த்தான். அப்படியே திகைத்துப் போய்விட்டான். அடடா இது வரைக்கும் தெரியாமல் தப்புப் பண்ணிட்டோமே என்று நினைத்தான். ஏன் தெரியுமா? அவன் கையில் இருந்தது வெறும் கல்லில்லை விலையுயர்ந்த இரத்தினக் கல் அது! இருட்டிலே என்ன என்று தெரியாததால் மூட்டையிலே இருந்த எல்லா இரத்தினக் கல்லையும் ஆற்றிலே வீசி எறிந்தான்.

இப்பொழுது அவனுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. வாழ்க்கையை வசதியாக்குவதற்கான வாய்ப்பு அவனுக்கு இருந்தது. இருந்தாலும் இருட்டிலே அதனை இழந்து விட்டான். ஒருவகையிலே அவனுக்கு கொஞ்ச அதிர்ஷ்டம் இருக்கு. அதனாலே தான் அந்தக் கடைசி கல்லை எறிவதற்குள் வெளிச்சம் வந்துவிட்டது!

பல பேருக்கு அந்த அளவுக்குக் கூட அதிர்ஷ்டம் இருப்பதில்லை! எல்லாவற்றையும் வீசியதற்கு பின்பு தான் வெளிச்சம் வரும். என்னவென்று விவரம் தெரியாமலே எழுந்து வந்து விடுவார்கள். வாழ்க்கை என்பது ஒரு பெரிய புதையல். அதைப் புரிந்து கொள்ளாமலேயே வீசி எறிந்து கொண்டிருக்கின்றார்கள் மனிதர்கள் என்கிறார் ஒஷோ.

சில பேருக்கு புரிந்து கொள்கின்ற நேரம் வரும். அதற்குள்ளே வாழ்நாள் எல்லாம் ஓடிப் போயிருக்கும். அதற்குப் பின்பு என்ன செய்வது? நம்ம ஆள் ஒருத்தன் கையிலே ஒரு சின்னப் பையோட வந்து கொண்டிருந்தான் பைக்குள்ளே ஏகப்பட்ட நகைகள் , இரத்தினக் கல் எல்லாம் இருக்கு!

வந்து கொண்டிருந்தவன் திடீர் என்று அந்தப் பையை அப்படி ஒரு குளத்திலே வீசி எறிந்துவிட்டான். மகான்கள் தான் இப்படி பற்றில்லாமல் இருப்பார்கள். என்னங்க இது ...? விலை மதிப்புள்ள அந்தப் பையை இப்படிக் குளத்திலே வீசி எறிந்து விட்டீர்களே ... இதுக்கு என்ன அர்த்தம்? என்று கேட்டார் அவர் கூட வந்தவர்.

அதற்கு மெதுவாக இவர் காதோடு காதாக "ஒரு பொலிஸ்காரர் பின்னாடி வந்து கொண்டிருக்கின்றார். அவர் போனபிறகு இதை எடுத்துக் கொள்வேன்!" அப்படி என்றார்.

ஒருவன் எப்போதும் கதாநாயகனாக இருக்க முடியாது. ஆனால், ஒருவன் எப்பொழுதுமே மனிதனாக இருக்க முடியும்! – *கவிஞர் கதே*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர்களின் அவலத்தை கொரோனாவால் மறைக்காதீர்கள்

கொடிய கொரோனா வைரஸ் தொற்று உலகம் முழுவதையும் ஆட்டிப் படைத்து நிற்கிறது.

கொரோனா மிகப் பயங்கரமான தொற்று நோய் என்பதில் மாற்றுக் கருத்திற்கிடமில்லை.

உலகில் கொரோனா மட்டுமே பிரச்சினை என்றிருக்கக்கூடிய மக்களுக்கு அது மட்டுமே இடைஞ்சலாகும்.

ஆனால் இலங்கைத் தமிழர்களின் நிலைமை அதுவல்ல.

அவர்களுக்கு பேரினவாதத்தால் இழைக்கப்பட்ட அநீதிகள், இழப்புகள், துன்பங்கள் என்பனவற்றுடன் கொரோனா ஆபத்தும் சேர்ந்து இரட்டிப்பான கஷ்டத்தை – துன்பத்தைக் கொடுக்கின்றன.

இதை நாம் கூறும்போது நீங்கள் கூறுவதற்கு ஏதேனும் உதாரணம் உண்டா? என்று கேட்டால் ஆம், காணாமல் போனவர்களின் உறவுகள் கொரோனா என்ற கொடிய நோய் தரக்கூடிய ஆபத்தை சிந்திக்கின்ற அதேநேரம் காணாமல்போன தன் பிள்ளை எப்போது வருவான் என்ற ஏக்கத்தையும் தாங்கி நிற்கின்றனர்.

இதுதவிர, உழைத்துத் தரக்கூடிய பிள்ளையை வன்னியில் இழந்ததன் காரணமாக இப்போது வீட்டுச் சீவியத்துக்காக ஏங்க வேண்டியுள்ளதே என்ற தீராக் கவலை.

இதற்கு மேலாக தாயை இழந்த ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள் தங்கள் தந்தை எப்போது சிறையில் இருந்து வருவார் என்று தவிக்கின்றன. இஃது ஆனந்தசுதாகரனின் குடும்பத்து நிலைமை மட்டுமல்ல, இப்படி எத்தனையோ தமிழ்க் குடும்பங்களை சுட்டிக்காட்ட முடியும். இவ்வாறாக எம் தமிழ் இனத்தின் நிலைமை இருக்கும் போது,

இலங்கையில் கொரோனா மட்டுமே பிரச்சினை என்பது போல காட்டிக் கொண்டு தமிழ் மக்களின் அவலத்தை, அவர்கள் படும் பதைபதைப்பை, ஏக்கத்தை எவரும் மூடி மறைத்துவிடக்கூடாது.

கொரோனா என்ற கொடிய நோயைக் கட்டுப்படுத்துவது முக்கியம் என்பதோடு தமிழ் மக்களின் அவலத்தை நிவர்த்தி செய்வதும் முக்கியமானதாகும்.

எனினும் தமிழ் மக்களின் ஆழ் மனத் துன்பங்கள் பற்றி எவரும் கருத்திலெடுப்பதாகத் தெரியவில்லை.

இதற்கு நல்ல உதாரணமாகப் பின்வரும் விடயத்தைக் கூறலாம்.

அண்மையில் பாடசாலை மாணவர்கள் இணைய வாயிலாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் சில வினாக்களை எழுப்பினர்.

நாங்கள் பாடசாலைக்குச் சென்று எப்போது படிப்பது, விளையாடுவது. சிறுவர்களாகிய நாங்கள் வெளியில் சென்று மகிழ்வாக ஓடித்திரிவது எப்போது என்றெல்லாம் கேள்வி எழுப்பினர்.

இவ்வாறு கேள்வி எழுப்பிய மாணவர்களில் நம் தமிழ் மாணவர்களும் அடங்குவர்.

பிரதமர் அங்கிள் சிறையில் இருக்கும் ஆனந்தசுதாகரனை விடுவித்து தாய் இல்லாத அந்த சின்னஞ் சிறுசுகளுக்கு ஆறுதல் கொடுக்க மாட்டீர்களா? என்று எந்த மாணவரும் கேட்கவில்லை. எவரும் சொல்லிக் கொடுக்கவும் இல்லை.

இங்குதான் தர்மம், புண்ணியம், பிறரையும் நேசிக்கும் பக்குவம் பிறழ்வடைகின்றன.

இவற்றைச் சரிப்படுத்தினால், கொரோனா போன்ற ஊழிக்காலத்துப் பேரழிவுகளும் உலகை விட்டேகும்.

# மத்திய மாகாணத்தில் 42 கொரோனா தொற்றாளர்கள்

(கொழும்பு)

மத்திய மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும், இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 42 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று, மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அர்ஜுன திலகரத்ன தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் 31 பேரும் மாத்தளை மாவட்டத்தில் 7 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் மூவருமே இவ்வாறு இனங் காணப்பட்டனர்.

கண்டி மாவட்டத்தில் இனங்காணப்பட்ட 31 பேரில், 21 பேர் கடற்படை வீரர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் கண்டி மாவட்டத்தில், அக்குறணைக்கு அடுத்ததாக, நாவலப்பிட்டி பிரதேசத்திலேயே அதிக தொற்றாளர்கள் இனங் காணப்பட்டனர் என்றும் நாவலப்பிட்டியில் இதுவரை, ஐவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ஜ)

# பாம்பு தீண்டியதில் வயோதிபர் மரணம்

(கரணவாய்)

மணற்காட்டிலுள்ள சவுக்கங்காட்டு பகுதியில் விறகு வெட்டச் சென்ற வயோதிபர் ஒருவர் பாம்பு தீண்டியதில் பரிதாபகரமாக உயிரிழந்தார். மணற்காடு, குடத்தனையைச் சேர்ந்த சத்தியாபிள்ளை அருள்நாதன் (வயது-62) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த சனிக்கிழமை விறகு வெட்டச் சென்ற நிலையில் அவரை பாம்பு தீண்டியது.

இந்நிலையில் அன்று மாலை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இருப்பினும் நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவரது மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திருமத அன்ரலா வின்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (இ-4-60)

# பணியிலிருந்து நீக்கப்பட்ட காவலாளி உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபையில் கடமையாற்றிய காவலாளி ஒருவர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதான இ. சிவகுமார் என்பவரே இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்.

இவர் நேற்றுக்காலை 8 மணியளவில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

1985 ஆம் ஆண்டு வேலை வங்கி மூலமாக விண்ணப்பித்த போது பிரதேச சபையில் தற்காலிக பணியாளராக பணியாற்ற வேலை கிடைத்தது.கடந்த 2000 ஆம் ஆண்டு பணி நிரந்தரமாக்கப்பட்டது.

அதன்பின்னராகத் தொடர்ந்து பிரதேச சபையில் பல்வேறு பதவிகளில் பணி புரிந்து இறுதியில் காவலாளியாக கடமைக்கு தள்ளப்பட்டேன்.

கடந்த 2018 ஆம் ஆண்டு மதுபோதையில் கடமையில் இருந்ததாக குற்றம்சாட்டப்பட்டு பிரதேச சபையால் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது.

வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தபின் மூன்று தடவைகள் நீதிமன்றம் சென்ற போதும் வழக்குத் தொடுத்த எவரும் ஆஜராகவில்லை.

அத்துடன் மீளக் கடமையில் இணைக்கப்படாது விட்டால் தனது ஓய்வூதியத்திற்கும் பாதிப்புள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8-104)

# மதுபோதையில் துன்புறுத்திய கணவனை அடித்துக் கொலை செய்த மனைவி!

(ஹாலிஎல)

மதுபோதையில் தினமும் துன்புறுத்திய கணவனை பொல்லால் அடித்துக் கொலை செய்த, மனைவி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை ஹாலிஎல, டெபதேவட்ட பகுதியில் இடம் பெற்றது.

36 வயது பெண்ணொருவரே இவ்வாறு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். தினமும் மதுபோதையில் வரும் கணவன், மனைவியைத் துன்புறுத்தி வந்துள்ளார்.

இந்நிலையில் அவரின் கொடுமையைப் பொறுக்க முடியாத கட்டத்தில், கட்டையால் அடித்துக் கொலை செய்த பின்னர் ஹாலி எல பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# சிகையலங்கார நிலையங்களை மீண்டும் திறக்க அரசு அனுமதி

(கொழும்பு)

சிகையலங்கார நிலையங்கள் மற்றும் ஒப்பனை நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியது. அழகுக்கலை நிபுணர்கள் மற்றும் சுகாதார அமைச்சருக்குமிடையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

கொவிட் - 19 வைரஸ் பரவலை தடுப்பதை நோக்காகக் கொண்டே நாட்டிலுள்ள ஒப்பனை நிலையங்கள் மற்றும் சிகையலங்கார நிலையங்களை மூடுமாறு சுகாதார அமைச்சு அறிவித்தது.

இந்நிலையில் இந்த நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு அனுமதி பெற்றுத்தருமாறு அழகுக்கலை நிபுணர்கள் சிலர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சுகாதார அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

பின்னர் இது தொடர்பில் கவனம் செலுத்திய சுகாதார அமைச்சு இது தொடர்பில் அவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதுடன், மீண்டும் திறப்பதற்காக அனுமதியையும் வழங்கியது.

கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக ஒப்பனை நிலையங்கள் மற்றும் சிகையலங்கார நிலையங்களை மூடுமாறு அரசாங்கம் தெரிவித்திருந்தாலும், எந்தவித சுகாதார பாதுகாப்பு செயற்பாடுகளுமின்றி தோட்டப்புறங்களில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும், கொரோனா வைரஸினால் உலகளாவிய ரீதியில் பெரும் அச்சுறுத்தல் தோற்றம் பெற்றிருந்தாலும், இலங்கையைப் பொறுத்தமட்டில் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் எனவும் அழகுக்கலை நிபுணர்கள் சுகாதார அமைச்சுக்கு தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சுகாதார அமைச்சு அவர்களுக்கு அனுமதி வழங்கியதுடன், சிகையலங்கார நிலையம் மற்றும் ஒப்பனை நிலையங்களை திறந்தாலும், முடிவெட்டுதல் போன்ற அத்தியாவசிய சேவைகளை மாத்திரமே செயற்படுத்துமாறும், இதன்போது சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கமைய செயற்படுமாறும் தெரிவித்துள்ளதுடன், சேவைகள் வழங்கும் போது நபர்களுக்கு இடையிலான இடைவெளியை பேண வேண்டியதன் அவசியம் தொடர்பிலும அவர்களுக்கு தெளிவுபடுத்தியது.

மேலும், சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கமைய இந்த சேவைகள் வழங்கப்படுகின்றதா என்பது தொடர்பில் சுகாதார பிரிவினர் மேற்பார்வை செய்வதாகவும் அறிவுறுத்தல் வழங்கினர்.

இதேவேளை இந்தக் கலந்துரையாடலின் போது சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி , சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க மற்றும் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் எல்.டி.கம்லத் உள்ளிட்ட வைத்திய பிரிவினரும், அழகுக்கலை நிபுணர்கள் பலரும் இணைந்து கொண்டனர். (ஜ-2)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### இயற்கையோடு இணைவோம்

- எல்லா உயிர்களையும் தன்னுயிராக மதித்துப் பேணுங்கள்.
- உலகிலுள்ள அனைவருக்காகவும் அன்றாடம் வழிபாடு செய்யுங்கள்.
- குற்றம் செய்வது மனித இயல்பு. ஆனால், அதையும் குணமாக ஏற்று அருள்புரிவது கடவுள் இயல்பு.
- நல்ல உணர்வுகளை உண்டாக்கும் சாத்வீகமான உணவுகளை மட்டுமே சாப்பிடுங்கள்.
- நம் உடலையும், உள்ளத்தையும் பாதுகாக்கும் அமுதம் போன்றது இயற்கை. அதனால், இயற்கையோடு இணைந்து வாழுங்கள்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**நூறு மனிதர்கள் கூடி தங்களை ஒரு கூட்டமாக ஆக்க முடியும். ஆனால், குடும்பத்தை உருவாக்க ஒரு பெண்ணால்தான் முடியும். -சீனப்பழமொழி**

# சீனா மீதான அமெரிக்காவின் குற்றச்சாட்டு வெறும் ஊகமே
# விஞ்ஞானபூர்வமான ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்து



(ஜெனிவா)

**சீன ஆய்வகங்களில் இருந்து கொரோனா வைரஸ் பரவியமைக்கான ஆதாரங்கள் உள்ளன எனும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் போம்பியோவின் கருத்துக்கள், விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) வலியுறுத்தியது.**

2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சீனாவின் வுஹான் நகரில் இருந்து பரவ ஆரம்பித்த கொரோனா வைரஸ், உலகில் ஏறக்குறைய 200 நாடுகளுக்கு பரவியது. குறித்த வைரஸ் பரவலின் காரணமாக கடந்த 4 மாதங்களுக்கு மேலாக இரண்டரை இலட்சத்துக்கும் மேலானவர்கள் உயிரிழந்தனர்.

இந்நிலையில் சீனாவின் தலையீட்டுடன், வுஹான் நகர ஆய்வு கூடங்களில் இருந்து வைரஸ் பரவியிருக்க கூடுமென குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறித்த சந்தேகத்தை எழுப்பியுள்ள அதே வேளை இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பணித்தார்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாக அண்மையில் கருத்து தெரிவித்திருந்த அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் போம்பியோ, சீனாவின் ஆய்வுக் கூடங்களில் இருந்து கொரோனா வைரஸ்பரவியமையினை உறுதி செய்வதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளன எனத் தெரிவித்திருந்தார்.

எனினும், குறித்த வைரஸ் மனிதர்களால் பரப்பப்பட்டவை அல்ல எனும் அமெரிக்க புலனாய்வு பிரிவின் முடிவினை தான் மறுக்கவில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் மைக் பொம்பியோவின் பேச்சு தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள உலக சுகாதார ஸ்தாபனம், இக்கருத்து ஓர் ஊகம் எனவும் இக்கருத்தானது விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அவசரகால நிலைகள் தொடர்பிலான உயர்நிலை உத்தியோகத்தர் வைத்தியர் மைக் ராயன் இது தொடர்பில் தெரிவிக்கையில், குறித்த வைரஸ் சீனாவின் ஆய்வுக்கூடங்களில் இருந்து பரவியமை தொடர்பில் அமெரிக்க அரசாங்கத்திடம் இருந்து எவ்விதமான ஆதாரங்களும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. ஆகவே எமது பார்வையின்படி இக்கருத்தானது ஊகம் எனத் தெரிவித்தார். (ஜ-2)

# பொலிவியாவில் இராணுவ விமானம் விபத்து; விமானப்படை வீரர்கள் உட்பட 6 பேர் பலி!

(சூக்ரே)

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் இராணுவ விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில், இரண்டு விமானப் படை வீரர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் பொலிவியாவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள டிரினிடாட் நகரில் சிக்கியிருந்த ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த சிலரை மீட்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இராணுவ விமானம் ஒன்றே கடந்த சனிக்கிழமை இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில், ஸ்பெயின் நாட்டினர் 4 பேரும் விமானி உட்பட 2 வீரர்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

விபத்துக்குள்ளாகியுள்ள பீச் கிராஃப்ட் பரோன் பி -55 என்ற இலகுரக விமானம் இயந்திரம் செயலிழந்ததால் விமானம் புறப்பட்டு 12 நிமிடங்களுக்குப் பிறகு டிரினிடாட்டில் உள்ள விமான நிலையத்திற்குத் திரும்ப திட்டமிட்டுள்ளதாக விமானி தெரிவித்ததாகவும் அப்போது விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதுடன் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானதாகவும் முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பொலிவியாவில் கொரோனா தடுப்பு நடவடிக்கை மற்றும் மனிதாபிமான பணிகளுக்காக இராணுவம் இறக்கப்பட்டுள்ளது. இங்கு சுமார் 1,500 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியும் 71 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# பாடசாலைகள் திறப்பிற்குப் பின் கொரோனா தொற்று அதிகரிப்பு

(கோபன்ஹேகன்)

டென்மார்க் நாட்டில் பாடசாலைகள் திறக்கப்பட்ட பின்பு கொரோனாவின் தாக்கம் அதிகரித்து இருப்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது. கொரோனா வைரஸ் வேகமாக பரவத் தொடங்கியதையடுத்து கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி முதல் ஏப்ரல் 14 ஆம் திகதி வரை ஐரோப்பிய நாடான டென்மார்க் ஊரடங்கை அமுல்படுத்தியது.

ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர் ஆரம்பநிலை பாடசாலைகளும் திறக்கப்பட்டன. சமூக இடைவெளியை பின்பற்றி வகுப்பறைகளில் மாணவ-மாணவிகள் உட்கார வைக்கப்பட்டனர்.

குழந்தைகளுக்கும் சிறார்களுக்கும் கொரோனா வைரஸ் எளிதில் தொற்றாது என்று வெளியான ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் இப்படி பாடசாலைகள் திறக்கப்பட்டன.

இந்த நிலையில் பாடசாலைகள் திறந்த பின்பு கொரோனாவின் தாக்கம் எப்படி உள்ளது என்பது பற்றி அந்நாட்டின் தேசிய சீரம் இன்ஸ்டிடியூட் ஒரு ஆய்வை மேற்கொண்டது.

அப்போது பாடசாலைகள் திறப்புக்கு பின்பு, ஊரடங்கு காலத்தில் இருந்ததை விட கொரோனா வைரஸ் பரவல் சற்று அதிகமாகி இருப்பது தெரியவந்தது.

கொரோனா தாக்கத் தொடங்கியது முதல் பள்ளிகள் திறக்கப்படும் முன்பு வரை டென்மார்க் நாட்டில் 6,670 பேர் பாதிக்கப்பட்டும் 300 பேர் உயிரிழந்தும் இருந்தனர்.

ஆனால் பள்ளிகள் திறக்கப்பட்ட பின்பு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்ட 15 நாட்களில் மட்டும் கொரோனா வைரஸ் தொற்றால் 2,630 பேர் பாதிக்கப்பட்டும் 160 பேர் உயிரிழந்தும் உள்ளனர். இது 0.3 சதவீத உயர்வு ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# பறந்து கொண்டிருந்த கிளிகள் திடீரென சாலையில் விழுந்து இறப்பு

## பரிசோதனையில் வெளியான அதிர்ச்சித் தகவல்

(மெல்பேர்ன்)

உலகம் முழுவதும் கொரோனாவின் தாக்குதலால் மக்கள் பலர் உயிரிழந்து வருகின்றனர்.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவின் ப்ரிஸ்பேர்ன் நகரத்தில் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த லாரிக்கீட் என்னும் இனக் கிளிகள் திடீரென வீதியில் விழுந்து இறந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதுகுறித்து க்ரிஃபித் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் நடத்திய சோதனையில் கிளிகளுக்கு புதிய வகை வைரஸ் பரவியுள்ளமை தெரிய வந்துள்ளது.

கால்களில் தொடங்கும் இந்த வைரஸால் ஒரு இடத்தில் நிலையாக நிற்க முடியாமல் தொடர்ந்து பறக்கும் கிளிகள் வானத்திலிருந்து விழுந்து இறந்து போகின்றன எனத் தெரிய வந்துள்ளது.

மேலும் இந்த வைரஸ் கிளிகள் ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்ளும்போது அவைகளுக்குள் பரவுகிறது மட்டுமல்லாமல் மெல்லப் பரவி நுரையீரலையும் பாதிக்கிறது.



இந்த வைரஸ் மனிதர்களை பாதிக்குமா? என்பது குறித்து ஆய்வாளர்கள் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே கொரோனா வைரஸ் மனிதர்களை பலி கொண்டு வரும் நிலையில், கிளிகளிடையே பரவியுள்ள புதிய வைரஸ் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஜ-2)

# கொரோனாவுக்கான சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிக்கு 800 கோடி அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும்



## உலகத் தலைவர்கள் உறுதி

(ஜெனிவா)

கொரோனா வைரஸ் தொற்றுக்கான சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிக்காக எட்டு பில்லியன் (800 கோடி) அமெரிக்க டொலர்கள் வழங்கப்படும் என உலகத் தலைவர்களால் உறுதியளிக்கப்பட்டது.

இதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தால் இணையத்தில் கூட்டப்பட்ட கூட்டத்தில் 40 நாடுகள் கலந்து கொண்டன.

இந்தத் தொகையைக் காட்டிலும் மேலும் கூடுதலான தொகை தேவைப்படலாம் என ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் ஊர்சுலா ஃபான் டேர் லெயன் தெரிவித்தார்.

இந்த நன்கொடை 30 இற்கும் அதிகமான நாடுகள், ஐ.நா. சபை, தொண்டு நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களால் வழங்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் பங்கேற்கவில்லை. சீனா சார்பாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான சீனப் பிரதிநிதி இதில் கலந்து கொண்டார்.

ஐரோப்பிய ஒன்றியம் தடுப்பு மருந்துக்கான ஆராய்ச்சிக்காக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது. நோர்வேயும் ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய அளவிலான தொகையை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. (ஜ-2)

## அமெரிக்க...

பொருளாதார நெருக்கடி ஆகிய விடயங்கள் தொடர்பில் அமெரிக்க தூதுவரு டன் பிரதமர் மகிந்த கலந்துரையாடியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸிற்கும் இடையில் நேற்றைய தினம் சந்திப்பொன்று இடம்பெற்றதுடன், இதன்போது கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு முகங்கொடுத்தல் மற்றும் அதன் பின்னரான பொருளாதார ரீதியான சவாலை எதிர் கொள்ளல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும் நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் நிலை குறித்துக் கருத்து வெளியிட்ட டெப்லிட்ஸ் "தற்போது பொது சுகாதாரத்துறை மேம்பாடு அடைந்திருப்பதாகவே நம்புகின்றோம். அது தொடரவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்" என்று குறிப்பிட்டார்.

அதேவேளை கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதன் பின்னர், நாட்டின் ஆடை உற்பத்தித் துறையின் மேம்பாட்டிற்கு அமெரிக்கா ஆதரவு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட பிரதமர், தற்போது நாட்டின் முன்னணி ஆடையுற்பத்தி நிறுவனங்கள் சுகாதாரப் பணியாளர்களுக்கான பாதுகாப்பு அங்கி (PPEs) உற்பத்திகளில் ஈடுபடுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அதனை ஏற்றுக்கொண்ட அமெரிக்கத் தூதுவர், இலங்கையின் பல்தேசியக் கம்பனிகள் மற்றும் சிறிய, நடுத்தர வணிக முயற்சிகள் இந்நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதைக் காண அமெரிக்கா விரும்புவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இருநாடுகளிலும் எதிர்வரவுள்ள தேர்தல் தொடர்பிலும் இருவரும் கலந்துரையாடியதுடன், நிலுவையிலுள்ள இருநாடுகளும் தொடர்புபட்ட திட்டங்களை சுமூக நிலை திரும்பியதும் தொடர்வதற்கு இணக்கம் காணப்பட்டது. (ம-3)

## கொரோனா...

குருநாகல் மாவட்டத்தில் 125 அரச நிறுவனங்களுக்கு கிருமிநாசினி திரவங்களை வழங்கும் வேலைத்திட்டத்தின் முதற்கட்ட பணிகளை பன்னலை பிரதேச செயலகத்தில் நேற்று ஆரம்பித்து வைத்தபின் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

மக்களின் சுகாதார பாதுகாப்பு என்பது தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் தொடர்பான நிலைப்பாடு. கொரோனா தொற்று காரணமாக மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

இப்படியான சந்தர்ப்பத்தில் தேர்தலை நடத்தி எப்படி மக்களை தெளிவுப்படுத்துவது. இதனால் முழு நாட்டிலும் சுகாதார நிலைமையைப் பாதுகாத்து, மக்கள் அச்சமும், சந்தேகமும் இன்றி வெளியில் இறங்கி வேலை செய்யக் கூடிய நிலைமை இருக்க வேண்டும்.

மக்கள் வாழ்க்கை இயல்பு நிலைமைக்கு திரும்பிய பின்னர் தேர்தலை நடத்தினால் நாங்கள் எதிர்க்க மாட்டோம்.

அவசரமான தேர்தல் 'காரணமாக மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவார்கள். நாங்கள் அதனை விரும்பவில்லை. இது தான் முக்கியமானது எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## கிராமிய பிர...

கோட்டாபய அறிவுரை வழங்கியுள்ளார்.

மாகாண ஆளுநர்கள் மற்றும் அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்களுடன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே ஜனாதிபதி இதுபற்றி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறுவன செயற்பாடுகள் குறித்து விரிவான திட்டங்களை சுகாதாரத் துறைகளுக்கு முன்வைக்குமாறு அறிவிக்கப்பட்டது.

பொதுப் போக்குவரத்து நடவடிக்கைகளை உரிய சுகாதார முறைமைகளை பின்பற்றி முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியதுடன், பணிக் குழாமினருக்கு போக்குவரத்து சேவைகளை வழங்குவதில் குறித்த நிறுவனங்களின் நலன்புரி சங்கங்களுடன் இணைந்து திட்டமிடக்கூடிய வாய்ப்புகள் குறித்தும் சுட்டிக் காட்டினார்.

நிறுவனங்களை நடத்திச் செல்லும் போது ஊழியர்களின் எண்ணிக்கையை தீர்மானிப்பது சேவைகள் பாதிக்கப்படாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். நிறுவன கட்டமைப்புக்கு ஏற்ப பணி முறை மாற்றங்களை தீர்மானிக்க முடியும். சேவைக்கு சமுகமளிக்கும் நேரத்தை கட்டளையாக வன்றி நிறுவன தேவையின்படி தீர்மானிக்க வேண்டும். ,

வீடுகளில் இருந்து வேலை செய்யும் போது சில நிறுவனங்கள் விரிவான ஒழுங்கில் சேவைகளை வழங்கியுள்ளன. அவற்றை முன்னெடுத்து மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தியை பயன்படுத்தி தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும் அவற்றுக்கு பதில்களை வழங்குவதற்கும் அதற்கு சட்ட ஏற்பை வழங்குமாறும் ஜனாதிபதி அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு பணிப்புரை வழங்கினார்.

அடையாள அட்டை, கடவுச் சீட்டு மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களங்களின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. வலய கல்விப் பணிப்பாளர்களின் பரிந்துரைகளின் பேரில் கிராமிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை திறக்கக்கூடிய வாய்ப்புகளை கண்டறியவும் தீர்மானிக்கப்பட்டது. இதன்போது நீர், துப்புரவேற்பாடு வசதிகள் மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மின்சாரம், நீர், நீர்ப்பாசனம், விவசாயம், கட்டிட நிர்மாணம் போன்ற அபிவிருத்தி பணிகள் ஏனைய மாவட்டங்களில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மே11ஆம் திகதி முதல் இயல்பு வாழ்க்கையை வழமை நிலைக்கு கொண்டுவரும் மாவட்டங்களிலும் அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட முடியும். வேலைத்தளங்கள் மற்றும் நிறுவனங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் நேரடி கண்காணிப்புக்கு உட்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

எலிக்காய்ச்சல் மற்றும் டெங்கு போன்ற நோய்கள் தொடர்பில் எதிர்காலத்தில் எழக்கூடிய பிரச்சினைகள் குறித்தும் அதிகம் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, பிரதமரின் செயலாளர் காமினி செனரத் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர். (ம-3)

## கொரோனா தொற்...

சேவைகள் பணிப் பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரி வித்தார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 8ஆவது நபர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் 9ஆவது நபரும் உயிரிழந்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் இறந்த இரண்டாவது பெண்மணி இவராவார். இந்தப் பெண் சுமார் ஒரு மாத காலமாக நோய்வாய்ப்பட்டு வீட்டில் இருந்ததாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நோய் நிலை மோசமடைந்ததால் அவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கிருந்து அவர் அங்கொடை தேசிய தொற்று நோயியல் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு பின்னர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் அந்தப் பெண் நேற்று மதியம் 12.50 மணியளவில் இறந்துவிட்டார்.

இதேவேளை, கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்த பெண்ணின் மெத்சந்த செவன அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 15 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், அந்த அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள 239 வீடுகளைச் சேர்ந்த 1200க்கும் மேற்பட்டோர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-3)

## முதியவர் ஒருவர்...

என்ற முதியவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த முதியவர் மனைவியை இழந்த நிலையில் தனிமையில் வாழ்ந்து வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,17)

## வேட்பாளர்களின்...

தல் விளம்பர பதாதைகளை அகற்றும் பணி இன்று தொடக்கம் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் தேர்தல் தொடர்பான சிறப்புக் கூட்டமொன்று நேற்றைய தினம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின்போது பொலிஸார் மற்றும் தேர்தல் அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் தேர்தல் ஆணைக் குழுவிற்கு கிடைக்கப் பெற்ற 6 முறைப்பாடுகளின் அடிப்படையில் தேர்தல் விதிமுறைகளை மீறி காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதாதைகளை அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக நேற்றைய தினம் சில பதாகைகள் அகற்றப்பட்டன எனத் தெரிவித்தார். (ம-3)

## கொரோனா சமூக...

இதனால் ஒவ்வொரு நபரும் சமூக இடைவெளியை பேணுவது மிகவும் முக்கியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் நாட்களில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர் நோய்த்தொற்று அறிகுறி தென்படாத நோயாளிகளின் ஊடாக நோய் பரவுகை ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும், அனைவரும் சமூக இடைவெளி பேண வேண்டியது அவசியமானது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுவரையில் பதிவாகிய கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளில் 50 வீதமானவர்கள் நோய்த் தொற்று அறிகுறி வெளிப்படுத்தப்படாத தொற்றாளிகள் என தெரிவித்துள்ளார்.

அடிக்கடி கைகளை கழுவுதல், சமூக இடைவெளியை பேணுதல் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் பின்பற்ற வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கைத்தொழிற்சாலைகள், காரியாலயங்கள், விற்பனை நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சுகாதார ஏற்பாடுகள் உரிய முறையில் ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டியது அவசியமானது என 'அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## விநியோகம்...

நோயாளிகள் பதிவாகாத கொழும்பின் 4 இடங்களில் கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மோதர - மெத்சத வீட்டு தொகுதியில் பதிவாகிய 44 வயதுடைய பெண் ஐ.டி.எச் வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்த பெண் நேற்று முன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ள நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகியதாக உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 771...

அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 771ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த 19 பேர் நேற்று முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதுவரை 213 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

549 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## ஒன்றுடன் ஒன்று...

தொடர்பில்லாத கொரோனா தொற்றாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்

இதனால் வைரஸ் தொற்று சமூகத் தொற்றாக மாறும் அபாயம் கொழும்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமையில் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் ஊரடங்குச் சட்டத்தை நீக்கி கொழும்பு நகரின் நடவடிக்கைகளை வழமைக்கு கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனினும் புதிய நிலைமைக்கு அமைய இந்த தீர்மானம் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்க காரணமாக அமையக் கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம-3)

## போதனாவிலிருந்...

சாலையில் உயிரை மாய்க்க முயற்சித்த போதைப்பொருள் சந்தேகநபர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

குறிதத நபர் வைத்தியசாலைக்கு அண்மையாக உள்ள கூலர் நிறுவனம் ஒன்றில் தரித்து நின்ற படி ரக வாகனம் ஒன்றை எடுத்துத் தப்பிச் சென்றதுடன், வாகனத்தை கல்வியங்காடு பகுதியில் கைவிட்டு தப்பித்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதுடன், படி ரக வாகனத்தை பொலிஸார் நேற்று காலை மீட்டனர்.

சம்பவத்தில் யாழ்ப்பாணம் நாவாந்துறையைச் சேர்ந்த போதைப்பொருள் குற்றச்சாட்டில் உள்ள விளக்கமறியல் சந்தேக நபரே தப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் சந்தேக நபர் நேற்று முன்தினம் தூக்கிட்டு உயிரை மாய்க்க முற்பட்டுள்ளார். அதனைக் கண்ட சிறை உத்தியோகத்தர்கள் தடுத்துள்ளனர். எனினும் சந்தேக நபர் மூச்சடங்கிய நிலையில் காணப்பட்டதால் உடனடியாகவே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சேர்த்துள்ளனர்

போதனா வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் சிறைக்காவலர்களின் பாதுகாப்பை மீறி சந்தேக நபர் தப்பித்துள்ளார்.

அங்கிருந்து சென்று அண்மையிலுள்ள கூலர் நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாடகை படி வாகனத்தை எடுத்துக் கொண்டு சந்தேகநபர் தப்பித்துள்ளார்.

அந்த வாகனத்தின் உரிமையாளரின் இலக்கத்துக்கு தொலைபேசி அழைப்பு வந்த நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு வாகன உரிமையாளரால் அறிவிக்கப்பட்டது.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் அந்த படி வாகனத்தை கல்வியங்காடு பகுதியில் வைத்து கோபாய் பொலிஸார் மீட்டெடுத்து யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்த நிலையில் சந்தேக நபர் மீளவும் கைது செய்யப்பட்டார்.

சம்பவத்தில் சந்தேக நபரால் எடுத்துச் செல்லப்பட்ட படி வாகனம் இன்று நீதிமன்றில் ஒப்படைக்கப்படும் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

# பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான சாதகமான சூழ்நிலை இல்லை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் இப்போதைய நிலையில் பாடசாலைகளை உடனடியாக ஆரம்பிக்கும் சாதகமான சூழ்நிலை இல்லையென சுகாதாரா சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்க கல்வியமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பாடசாலைகளை ஆரம்பிக்க முன்னர் செய்யப்பட வேண்டிய சுகாதார பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்து விசேட சுற்றறிக்கையொன்றை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயக அலுவலகம் கல்வியமைச்சுக்கு அனுப்பியுள்ளது.

பாடசாலைகளை சுத்தப்படுத்துவது. கிருமிநாசினிகளை தெளிப்பது. மாணவர்களை சமூக இடைவெளிக்குள் அமர வைப்பது உட்பட பல விடயங்களை இந்த சுற்றறிக்கை உள்ளடக்கியுள்ளது. (ம-3)

# இரத்ததான முகாம்

(சித்தன்கேணி)


சித்தன்கேணி இளைஞர் முன்னேற்ற கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்ததான முகாம் நாளை 07.05.2020 வியாழக்கிழமை காலை 9.00 - 12.00 மணி வரை கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருதிக் கொடையாளர்கள் அனைவரும் உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இரத்ததான முகாம் ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ம-3,17)






# மரண அறிவித்தல்



## கலாபூஷணம் கந்தையா தவராசா

(கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியின் ஓய்வு பெற்ற முன்னாள் ஆசிரியர்)

அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கலாபூஷணம் கந்தையா தவராசா நேற்று (05.05.2020) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.


அன்னார் மணியம் மாஸ்டர் என அழைக்கப்படும் பிரபல சிற்பாசிரியர் காலஞ்சென்ற வல்லிபுரம் கந்தையா மற்றும் யோகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - அன்னலக்ஷ்மி ஆகியோரின் பாசமிகு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும் பவானி, சறோயா, சிவராசா (நோர்வே), யோகராணி (கனடா), சாந்தினி (ஜேர்மன்), திருலோஷனி (கனடா), ஆனந்தராசா (நோர்வே), அருளேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காயத்திரி (லண்டன்), கார்த்திகா, மயூரன், சத்திப்பிரஷாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அகிலன் (லண்டன்), மயூரன் ஆகியோரின் மாமனாரும், கனிஷ்கா, கவிநயா, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று பிற்பகல் நான்கு மணியளவில் இல.40/2, கலைமகள் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.40/2, கலைமகள் வீதி, அரியாலை. (C-9565) தகவல் : குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் – 17.10.1944 மறைவு – 05.05.2020

## திருமதி குணசிங்கம் இராஜேஸ்வரி

கதிரிப்பாயை பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கு மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணசிங்கம் இராஜேஸ்வரி நேற்று (05.05.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை செல்வராஜா - சத்தியபாமா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும், பொன்னுத்துரை குணசிங்கம் (குணம்) அவரின் அன்பு மனைவியும், சிவானந்தன், கிருபானந்தன், மதிவண்ணன், தயாளன், ரஞ்ஜனி ஆகியோரின் அன்புத் தாயாரும், காயத்திரி, ஹமலகாஷினி, பவளகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும், மாதங்கி, கஜாணன், விஸ்னுதன், கவிஷ்னன், ஜஸ்விகா, அஸ்மிதா ஆகியோரின் அன்பு பேத்தியாரும், காலஞ்சென்ற கோமலேஸ்வரி, சத்தியேஸ்வரி, காலஞ்சென்ற பேரின்பராஜா, யோகராஜா, காலஞ்சென்ற சித்திரராஜா, குகனேஸ்வரி, விக்னராஜா, லோகேஸ்வரி, திலகராஜா, அகிலராஜா ஆகியோரின் அன்பு சகோதரியும், நிர்மலாதேவியின் உடன் பிறவா சகோதரியும், காலஞ்சென்ற அருளம்பலம், இராஜரட்னம், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரஜீவ், சஞ்ஜிவ், தனுஸா ஆகியோரின் அன்பு பெரிய தாயாரும், கிருஷாந்தியின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய். (C-9566) தகவல் - குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.